529

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 27 | நள ஹூ கார்த்திகை மீ 1வ [16—11—76] | இதழ் 11

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 34. கழுமலமுதுபதிக்கவுணியர்

### A. இறைவனைக் கண்டு காட்டியவர்.

''பிள்ளை பாதி புராணம் பாதி'' என்பது உலக வழக்கு. சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம் மொத்தம் 4286 திருவிருத்தங்களாலானது திருஞானசம்பந்தப்

பெருமானின் திருக்கதைமட்டும் 1256 விருத்தங்களாலானது. எல்லா நாயன்மார்கள் கதையினும் இக்கதையே பெரியது என்ற காரணத்தால் எற்பட்ட பழமொழியே மேற் கூறப் பட்டுள்ளது

வேதமென்பது பொதுவாக எல்லாத் தெய்வங்களுக்கும் வழிபாட்டுமுறையைக்கூறுவது. சைவம் முழுமுதற்பொருள் சிவபெருமானே என்றும், சிவபெருமானையடைவதற்கான சரியை, கிரியை,யோகம், ஞானமாகிய வழிகளைத் தெளிவாகக் காட்டும், சைவ சித்தாந்தம் வேதத்திற்கு உட்படுகின்றது. சைவாகமப்படி வேதத்திற்குப் பொருள் கொள்ளுகிறது. பிறர் கொள்ளும் வேத நெறிக்கும் சைவ நெறி கொள்ளும் வேதப் பொருளுக்கும் வேறுபாடு உண்டு என்பர் பெரியோர். எனவே ஞானசம்பந்தரை வணங்கிய சேக்கிழார் பெருமான் வேதம் சைவ நெறி இரண்டும் மேன்மையானவை எனக் குறித்தார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயறபுகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

கவிஞர்கள் எதையுமே தமது மந்திரக்கவிதாசக்தி மூலம் படம்பிடித்து நம் மனக்கண் முன்னே கொண்டு வந்துகாட்டி விடுவார்கள்.

சீர்பூத்த திருமுகமும்: தேவிமுலைப்பால் பூத்த செய்ய வாயும்
ஏர்பூத்த அருள்பொழியும் இருவிழியும்: பொற்றாளமேந்து கையும்
பேர்பூத்த தமிழ்க்கூடல் திருஞானசம்பந்தப் பெருமான் செம்பொன்
தார்பூத்த சிறுதண்டைத் தாளும் உளத்துள்ளி வினை தள்ளிவாழ்வாம்.

என திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் தமது திருஞானசம்பந்த சுவாமிகள் பதிற்றுப்பத்தந் தாதியைத் தொடங்குகிறார்கள். கதாநாயகரான சம்பந்தப் பெருமானையே இக்கவிதைக் கண்ணாடியில் காணலாம். தக்க சமயத்தில் தகுந்த உவமையிடுவதென்பது நம்நாட்டுக் கவிஞர் கட்கு கைவந்ததொருகலை. வில்லை முறிப்பதற்காக இராம

பிரான் சனக சபையில் திடீரென்று எழுந்தான். சனகர் வீட்டில் தினமும் வேள்வி நடைபெறும். எனவே நெய்யாகுதி செய்யும் போது திடீரென்று பிழம்பு (ஜ்வாலை) நெய்யை நோக்கித் தாவுவது போல் எழுந்தான் இராமன்.

பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்க
எழுந்த கொழுங்கனல் என்ன எழுந்தான்.

என்பர் கம்பர். அதுபோல, வேள்விசெய்யும் வேதியர் குலத்திலே தோன்றிய ஞானசம்பந்தர் பிறந்த ஊராகிய திருக்கழுமலமூதூரில் ஒரு காட்சியைக் காட்டுகிறார் கவிஞர்.

வேதியர்கள் அனுதினமும் தமது இல்லங்களில் வேள்வித்தீயில் நெய்யாகுதி செய்வதால் ஏற்பட்ட புகை, பகலை இரவாகச் செய்துவிடுகின்றது நள்ளிரவில் அவர்கள் திருமேனியிலுள்ள திருநீற்றொளி இரவைப்பகலாகவே காட்டுகின்றதாம்.

உளங்கொள் மறைவேதியர்தம் ஓமதூமத்திரவும்;
கிளர்ந்ததிரு நீற்றொளியிற் கெழுமிய நண் பகலுமலர்ந்து;
அளந்தறியாப் பல்லூழி ஆற்றுதலால் அகலிடத்து
விளங்கிய அம்மூதூர்க்கு வேறிரவும் பகலுமிகை.

நல்லோர் பிறக்கும் அவ்வூரில் இயற்கையன்னையே ஒரு யாகசாலைபோல் காட்சியளிக்கிறாள். வயலோரத்திலே மாமரங்கள் வளர்ந்துள்ளன. வயலில் தண்ணீர்ச்செழுமையின்காரணமாக பயிர்களுக்கு நடுநடுவே தாமரைகள் மலர்ந்துள்ளன. மாமரத்தில் பழம்பிளந்து அதன் சாறுமாவிலையில்விழ, மாவிலையில் விழுந்தசாறு வழிந்து கீழுள்ள தாமரையில் விழுகின்றது. தாமரை ஒரு அக்கினி குண்டம் போல் காட்சியளிக்கிறது. வேதியர் மாவிலைகளில் நெய்யெடுத்து ஆகுதி செய்வதுபோல் மாம்பழச்சாறு மாவிலை மூலமாக விழுகிறதாம்.

பரந்த விளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில் வளர் தேமாவின் கனிகிழிந்த மது நெறு நெய்
நிரந்தரம் நீள்இலைக் கடையால் ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களும் ஆகுதி வேட்கும் தகையவென வயங்கியதால்.

என்பது கவிச்சித்திரம்!

நல்லோராகிய பெரியவர் அவதரிக்கும் அவ்வூர் பலபல சிறப்புக்களையுடையது. பிரமன் பூசித்ததால் பிரமபுரம் என்

றும், சூரபத்மனுக்குப் பயந்து ஒளிந்து சீர்காழியில் இந்திரன் பூசித்தபோது இறைவன் வேணு(மூங்கில்)வாய் முளைத்ததால் **வேணுபுரம்** என்றும், சூரனுக்குப் பயந்து முருகனைத்தந்தருளு மாறு தேவர்கள் சிவபெருமானைப் புகலடைந்ததால் **புகலி** என்றும், சுக்கிரன் பூசனை செய்து தேவகுருவான பிரகஸ்பதிக்கு இணை எனப் பெயர் பெற்றமையால் **பெருவெங்குரு** என்றும், உலகமெலாம் பிரளய வெள்ளத்தில் மூழ்கியபோது தோணி யாக மிதந்தமையால் **தோணிபுரம்** என்றும், திருமால் வராகவு தாரமெடுத்து இரணியரக்கனைக்கொன்ற பாவம்தீர பூசித்தமை யால் (பூ=பூமி—தராய்=தரித்தவன்) என்றதால் **பூந்தராய்** (சங்கநிதி பதுமநிதிக்கான தேவதைகள் பூமாலைகளாயிருந்து பூசித்தமையால் **பூந்தராய்**) என்றும், தேவர்களுடன் அரக்க னாகிய சிரம்பன் என்பவன் அமுதுண்டபோது,சூரியன் கண்டு பிடிக்க, திருமால் தன் கையிலிருந்த சட்டுவத்தால் அவன் தலையை அறுக்க, அவன் ராகுவாக மாறிப் பூசித்தமை யால் **சிரபுரம்** என்றும், தீக்கடவுள் புறுவாக வந்து சிபி சக்கர வர்த்தியின் உடம்பை அறுத்து வைக்கக் காரணமாக இருந்த மையால் அப்பாவம் நீங்கச் சிவபூசை செய்தமையால் **புறவம்** என்றும், கபிலர் சாபத்தால் உலக்கைபொடி சண்பைப் புல் லாகி யாதவர்கள் அழிய,அதற்குக்காரணமாக இருந்த கண்ண னும் கபிலனும் சிவபூசை செய்து பாவம் நீங்கியமையால் **சண்பை** என்றும், கண்ணனிடம் தோற்ற காளிங்கன் என்ற பாம்பு தவம் புரிந்தமையால் **காழி** என்றும், பராசர முனிவர் மச்யகந்தி என்ற செம்படவ மங்கையைத் திருமணம் செய்து கொண்டதால் ஏற்பட்ட கெட்ட நாற்றமும் பழியும் நீங்கச் சிவபூசை செய்ததால் **கொச்சைவயம்** என்றும் உரோமசர் என்ற முனிவர் பூசித்து ஞானோபதேசம் பெற்றமையால் உல கத்தவரின் ஆணவாதி மலங்களைக் கழுவி நீக்கி வரம்பெற்ற மையால் **கழுமலம்** எனவும் பெயர் பெற்றது.

> பிரமபுரம்: வேணுபுரம்: புகலி: பெருவெங்குரு; நீர்ப்
> பொருவில் திருத்தோணிபுரம்; பூந்தராய்; சிரபுரமுன்
> வருபுறவம் சண்பைநகர்; வளர்காழி; கொச்சைவயம்
> பரவு திருக்கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்க்கப்பெற்ற திருப்பதியில் அந்தணர் மரபில் கௌண்டின்ய கோத்திரத்தில், சிவபெருமானின் திருவடியை என்றும் இதயத்தில் வைத்து வணங்கும் சிவபாதயிருதயர் என்றவரும், பகவதியார் என்ற அம்மையும் வாழ்ந்தனர். மக்கட்பேற்றை விரும்பிய இவ்விருவரும், தனக்குப்பின் நாட்டையாளத்தக்க ஒரு அரசன் வேண்டுமே எனத் தயரதன் விரும்பியதுபோல், பரசமயம் நிராகரித்து நீருக்கும் புனைமணிப்பூண் காதலனைப் பெறப் போற்றும் தவம் புரிந்தார். உலகத்தவருக்கு ஜாதகங்களில் கோள்கள் உச்சநிலையிலிருந்தால்நல்லது. ஞானசம்பந்தப்பெருமானுக்கு சைவம் தழைக்க அவர் முயற்சியில் தாமும் ஒத்துழைப்பதற்காகக் கோள்கள் தமக்கு பலமுடைய இடங்களில் தாமாக அமர்ந்தன. சம்பந்தப்பெருமானின் திருவாக்கு மற்றவரின் இலக்கிய இலக்கணம் போல் அல்லாது 'இவனன்றே' என இறைவனையே சுட்டிக் காட்டியமையால், இவர்தம் பிறப்பால் வண்தமிழ் செய்ததவம் நிரம்பியது என்கிருர் கவிஞர்.

இராமன் மனிதனாக வந்தமையால் வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றது எனக் கம்பன் கூறியதுபோல ஞான சம்பந்தர் பிறந்தமையால் படைப்புத்தொழிலே முதன்மை பெற்றதாம். சங்குகள் ஊதுவாரின்றித் தாமாக ஒலித்தன, பத்தாவதுநாள் முருகனைத் தாமரைத் தொட்டிலில் இட்டமாதிரி தொட்டிலில் இட்டனர். அம்மையின் பாலைச் சாப்பிடக் கூடியவருக்கு, பகவதியார், தனது பக்தியினுல் சுரந்தபாலையே ஊட்டினுர். உலகத்தவரைப் போல குழந்தையின் மீதுள்ள பற்றினுல் சுரந்த பாலல்ல என்பது குறிப்பு. திருநீற்றையே காப்பிட்டனர், வேறுஒருவருக்கும் அடிமையாகமாட்டோம் எனத்தலையாட்டினுர் எனச் செங்கீரைப் பருவம் குறிப்பிடப் பெறுகின்றது. நன்கு நடந்த சமணம் முதலானவை சம்பந்தப்பெருமான் தவழ ஆரம்பித்ததும், தாமும் தளர்ந்து தவழ்ந்தன. மற்ற சமயங்கள் தளர்நடைபோடத் தாமும் தளர் நடை நடந்தனர். மூன்று வயதாகியது. சீகாழியில் பிறந்தவர், ஏதோ பழைய நினைவுவர, (இறைவன் திருவடி நினைவு காரணமாகயிருந்திருக்கலாம்) திடீரென்று அழுதார்.

ஒருநாள் தந்தையார் நீராடச் சென்றபோது தாமும் பிடிவாதமாகப் பின் சென்றனர். தந்தையார் நீரில் மூழ்கிய போது, அவரைக் காணாது அழுதருளினார். (பசித்தழு ஞான மகவு=பசியினால் அழுதார் எனக்குறிப்பார் பட்டினத்தார்) முன்நல்வினைப் பயனோ! குழந்தைத்தனமோ! தோணியப்பரின் ஆலயகோபுரத்தைப்பார்த்து "அம்மே!அப்பா! என அழைத்து அழுதனர். அதுபோது இறைவன் இறைவியை நோக்கி "பொன் வள்ளத்து உனது மார்பிலுள்ள பாலைக் கறந்து அளிப்பாயாக" என அம்மையார் குழந்தையின் கண்ணீரைத் துடைத்து, கையிற் பொற்கிண்ணத்தில் பாலளித்தனர்.

எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி
உண்ணடிசில் எனஊட்ட உமையம்மை எதிர் நோக்கும்
கண்மலர் நீர்துடைத் தருளிக் கையிற் பொற் கிண்ணமளித்து
அண்ணலை அங்கழுகை தீர்த்து அங்கணனார் அருள் புரிந்தார்.

அம்மைக்குத் தனிவுருக் கிடையாதாதலின், இறைவனது கருணையே அம்மையாக வந்தது. எனவே அங்கணனார் தீர்த்தருளினார் என்பது குறிப்பு. இறைவரால் ஆளப்பட்டமையால் ஆளுடைப் பிள்ளையார் ஆனார். கலையறிவினால் ஏற்படுவது பரஞானம். ஆத்மானுபூதியடையும் போது இறைவனளிப்பது அபரஞானம். பரஞானம் பவமதனை மாற்றும். அபரஞானம் சிவபெருமானது திருவடியையே சிந்திக்க வைக்கும். சிவ ஞானசம்பந்தராக மாறிய பிள்ளையார் இருஞானங்களையும் உணர்ந்தார்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம்; உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

நீராடி முடித்த தந்தையார், வாயில்பால்வழிய நின்ற குழந்தையைப் பார்த்து திடுக்கிட்டு "எச்சில் வழியுமாறு உனக்குப் பால் அளித்தது யார்? "எனச் சிறுமாறு கொண்டு பயமுறுத்திக் கேட்க, இறைகாட்சி கிடைத்துக் கொண்டேயிருந்தமையால், ஒருகால் எடுத்து ஆடிக்கொண்டே, தனது விரலால் அக்காட்சியைக் காட்டிக் கொண்டே பாடலானார். சின்முத்

திரையில் ஆட்காட்டி விரலே ஆன்மா என்பர். அது இறைவனைச் சுட்டிக்காட்டிப் பெருமையடைந்ததால் ஒப்பில்லாததாயிற்று எனவே 'ஒரு திருக்கை விரற்சுட்டி' எனக்கூறினர்

"சம்பந்தப் பெருமானே! இறைவனை ஒரு திருவிரலாற் சுட்டிக்காட்டிய நீர் உம்மை எனக்குக்காட்டினால் உயர்வடைவேன்" என்று கூறுகிறார் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்.

ஐய! அயனால் நெடுமாலால் அளந்து காணப் பரம்பொருளைத்
துய்ய ஒரு கைவிரலாலே சுட்டிக் காட்டுஞ் சம்பந்தா!
வைய மதிக்கும் தென்கூடல் மணியே! வயங்கு பொற்றாளக்
கைய! உன்னை எனக்கறியக் காட்டினால் அதுவே போதுமால்.

ஞானசம்பந்தரின் தேவாரத்தை இருக்கு வேதத்தின் சாரம் என்பர். இருக்குமொழி என அடைமொழியால் என்றும் இருக்குமொழி எனப்பொருள் பெற வைத்தார் அருள்மொழித்தேவர். சிவஞான சம்பந்தப் பெருமான் தன் திருவிரலால் சுட்டிக் காட்டி.

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

திருச்சிற்றம்பலம்

எனப்பாட, தமிழுலகம் செய்ததவத்தால் தேவாரம் பிறந்தது. வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறை விளங்க ஆரம்பித்தது.

திருச்சிற்றம்பலம்

(தொடரும்)

# சேக்கிழாரும் சேயிழையார்களும் 5

'சிவநெறித் தவமணி'
செல்வி: த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை.
54, ஜடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

## அநிந்திதையார் — சங்கிலியார் (பிற்பகுதி)

சென்ற இதழில், சிவபெருமான், சுந்தரமூர்த்தி நாயனாரிடம், சங்கிலியை உனக்குத் தருகிறோம், கவலை ஒழிக என்று நனவில் சொல்லிவிட்டு, சங்கிலியாரிடம் கனவில் சென்று சுந்தரரை மணந்து கொள்ளுமாறு அருளினார் என்று சிந்தித்தோம்.

பெரும்பாலோர் சதை உடம்பின் அனுபவங்களே மனதில் பதிந்து கனவாக வருகின்றன என்று கருதுகின்றனர். ஆனால் சிவபெருமான் சங்கிலியாருக்குக் கனவில் அறிவித்த அறிவிப்பு அந்த அம்மையாருடைய சதை உடம்பின் அனுபவத்தில் உள்ளது அல்ல. அதிலிருந்து சதை உடம்பால் அனுபவியாத பல அனுபவங்கள் கனவிலும் வரும் என்பது தெளிவாகிறது அல்லவா? இதனை யாவரும் அனுபவத்தில் உணரலாம்.

தமிழ் மொழியில் ஐம்பொறிகள் என்றும், ஐம்புலன்கள் என்றும் சொற்கள் இருக்கின்றன. புலனைந்தும் பொறி கலங்கி என்ற தேவாரத்தில் இதனைக் காண்க. ஐம்பொறிகள் என்ற சொல் சதை உடம்பிலுள்ள மெய், நாக்கு, மூக்கு, கண், காது இவற்றைக் குறிக்கும் இவற்றை ஞானேந்திரியம் அல்லது அறிகருவிகள் என்றுசொல்வார்கள். ஆனால் தூங்கும் பொழுது இந்த சதை உடலிலுள்ள அறிகருவிகள் தொழிற் படுவதில்லை என்பதை யாவரும் அறிவர். அவ்வாறு தூங்கும் பொழுது கனவில் மேலே சொன்ன பொறிகளின் உதவியின்றித் தொட்டு உணர்கிறோம். சுவை உணர்கிறோம். வாசனை அறிகிறோம். பார்க்கிறோம். கேட்கிறோம். அவ்வாறு

தொழிற்படுவதற்குக் கனவில் தொழிற்படுகின்ற உடலில், தொட்டு உணர்வதற்கு மெய்யும். சுவைத்து உணர்வதற்கு நாவும், மோப்பம் அறிவதற்கு மூக்கும் உருவத்தை அறிவதற்குக் கண்களும், கேட்டு அறிவதற்குக் காதுகளும் இருக்க வேண்டும் என்பது புலனுகின்றதல்லவா? அவற்றையே புலன்கள் என்ற சொல்லால் குறிப்பிட்டனர் நமது முன்னோர்கள். சொப்பனத்தில் இன்ப துன்பம் அனுபவிக்கின்ற உடல் ஒரு தனி உடல் என்பதையும் அதில் கீழே கண்ட 25 தத்துவங்களும்உள்ளன என்பதையும் புரிந்து கொள்ளல் வேண்டும். சதை உடம்பில் உள்ள புறஞானேந்திரியமாகிய ஐம்பொறிகளும், புறக்கன்மேந்திரியமாகிய கால், கை, வாய், ஜலதாரை மலதாரை ஐந்தும் ஆகப் பத்துக் கருவிகளும் தொழிற்படுவதற்கு, கனவு காணுகின்ற உடம்பிலுள்ள. அக ஞானேந்திரியமாகிய புலன்கள் ஐந்தும் அகக் கன்மேந்திரியமாகிய ஐந்தும், தசவாயுக்களும், அந்தக் கரணங்கள் நான்கும் உயிரும் ஆக (5+5+10+4+1) 25 தத்துவங்களும் தொழிற்பட வேண்டியதிருக்கிறது. அதனுலேயே

சாக்கிரம் முப்பத் தைந்து நுதலினில் கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து களத்தினில் சுழுனை மூன்று
நீக்கிய இதயந் தன்னில் துரியத்தி லிரண்டுநாபி
நோக்கிய துரியாதீத நுவலின்மூலத்தி லொன்றே.

என்று சிவஞான சித்தியார் 223வது பாடல் கூறுகிறது.

இதில் சதை உடம்பிலுள்ள ஐம்பொறிகளும், கன்மேந்திரியங்களும், தொழிற்பட வேண்டுமானுல் சொப்பன உடம்பிலுள்ள அந்தந்த அகக்கருவிகள் தொழிற்பட்டேயாக வேண்டும்.

அதனுலேயே சொப்பன உடலிலுள்ள வாய் உரமாகப் பேசினுல் அந்த சப்தம் சதை உடம்பின் வாய் மூலம் வெளியாவதும். கனவில் கால் வேகமாக உதைத்தால் சதைக் காலும் தூக்கி அடிபடுவதும், கனவில் கண்ணீர் வடித்தாலுமோ நெஞ்சு பதைபதைத்தாலுமோ அவை சதை உடம்பிலுள்ள அந்தந்த அவயவத்தில் பிரதிபலிப்பதும் காணப்பெறு

கின்றன. ஆதலால் கனவில் தொழிற்படுகின்ற உள்ளுடம்பே விழிப்பில் பாரமுள்ள உடலைத் தொழிற்படுத்த வேண்டிய திருக்கிறது என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளலாம். கனவில் தொழிற்படுகின்ற பாரமில்லாத உடம்பிற்குரிய கரு வைக் கடவுளே தகப்பனரிடம் கொடுக்க வேண்டியதிருக் கிறது. எல்லோரும் கடவுளையே உண்மையான அம்மை அப்பன் என்று அழைத்தார்கள். அதனாலேயே குழந்தை களைத் தகப்பனர் தனது விருப்பம்போல் பெற்றுக்கொள்ள முடியாமல் கடவுளிடம் கேட்டுப் பிரார்த்தித்திருக்கிறார்கள்.

கடவுள் என்று தகப்பனரிடத்தில் கருவைக் கொடுத் தாரோ, அன்றே ஆண்கருவாயிருந்தால் ஆண்பெயரையும், பெண் கருவாயிருந்தால் பெண் பெயரையும் சூட்டி அக்குழந் தைக்குரிய தலையெழுத்தையும் கைகளில் இரேகைகளாகப் பொறித்து குழந்தை பிறந்தபின் அதே பெயரையே சூட்டும் படி செய்து விடுகிறார்.

கடவுள் கொடுத்த, கனவில் தொழிற்படுகின்ற உடல் இவ்வுலகிலுள்ள எந்த ஆயுதத்தாலும். அணுகுண்டுகளாலும் ஐம்பூதங்களாலும் அழியப்பெறாமல் இறந்தபின் தொடர்ந்து வாழ்ந்தும், வளர்ந்தும், வருகின்றது. அதனாலேயே சுந்தர மூர்த்தி சுவாமிகள் நொடித்தான் மலைப்பதிகத்தில் ஊன் (சதை உடல்) உயிர் வேறு செய்தான் என்றும் வெள்ளை யானையின் மேல் என்னுடல் (சொப்பன உடல்) காட்டு வித் தான் என்றும் அருளியிருக்கிறார்.

சொப்பன அனுபவமும், விழிப்புநிலை அனுபவமும் ஒன்று தான் என்பதைத் திருவள்ளுவர் ''கனவுநிலை உரைத்தல்'' அதிகாரத்தில் கீழ்வருமாறு கூறியிருக்கிறார்.

நனவினால் நல்காதவரைக் கனவினால்
காண்டலின் உண்டென உயிர்.

பொருள்:— நனவின்கண் வந்து தலையளி செய்யாதவரை யான் கனவின்கண் கண்டகாட்சியானே என்னுயிர் உண் டாகா நின்றது.

நனவினுல் கண்டதூஉம் ஆங்கே கனவும்தான்
கண்ட பொழுதே இனிது.

பொருள்:- நனவில் கொண்ட இன்பமும் கனவில் கொண்ட இன்பமும் ஒத்திருப்பதால் கனவில் காதலரைக் கண்டு பொறுத்துக் கொண்டிருப்பேன்.

சொப்பன உடலே விழிப்பு நிலையில் சதை உடம்பு மூலமாக சகல இன்ப துன்பங்களையும் அனுபவிக்கிறதாலும், கனவு நிலையில் அதே உடம்பு சதை உடம்பின் உதவியின்றி இன்ப துன்பங்களை அனுபவிப்பதாலும், கனவில் வருகிற அனுபவங்கள் அனைத்தும் நனவில் அனுபவித்ததாகவே தோன்றுவதை யாவரும் அறிவர்.

ஆகவே சுந்தரருக்கு நனவில் அறிவித்ததும், சங்கிலியாருக்கு சொப்பனத்தில் அறிவித்ததும் சிவபெருமானது அருட்தன்மையேயாகும். சிவபெருமான் சங்கிலியார் கனவில், சுந்தரருக்காகச் சென்று மணம் பேசினுர். சங்கிலியாரும், நாணத்துடன் "நிலைபெற்ற திருவாரூரில் அவர் மகிழ்ச்சியோடும் தங்குவார் என்பதனை அறிந்தருள்வீராக" என்று நயமாகக் கூறினுர். சிவபெருமான் ":உன்னை விட்டுப் பிரியேன் என்று என் சந்நிதியில் சுந்தரன் சபதம் செய்வான்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தார்.

பின்னர் சிவபெருமான், சுந்தரரிடம் சென்று, "சங்கிலி உன்னை மணக்க நீ என் சந்நிதியில் உன்னை விட்டுப் பிரியேன் என்று சங்கிலியிடம் சபதம் செய்து கொடுக்க வேண்டும்" என்றுர். அதற்கு சுந்தரராம் நம்பிகள் "இறைவரைப் பிற பதிகளிலும் சென்று கும்பிட வேண்டிய எனக்கு இது தடையாம். எனவே நான் சபதம் செய்யும்பொழுது தேவரீர் சிவலிங்கத்தில் தங்காமல் மகிழ மரத்தில் சென்று தங்கியிருக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அவருடைய மேருவினும் மேம்பட்ட தவத்தின் பெருமையால் அதற்கும் அரனுர் உடன்பட்டார். ஆயினும் சங்கிலியாரின் வழிவழி வந்த அடிமைத் திறத்தின் பெருமையால் மற்றுமொரு திருவிளையாடலையும் அவர் நிகழ்த்தாமலில்லை, இறைவர் மீண்டும்

சங்கிலியார் கனவில் தோன்றி "பெண்மணி நமது தோழன் சிவலிங்கத்தின் முன் சபதம் செய்ய வருவான். நீ இசையாது மகிழ மரத்தின் கீழ் சபதம் செய்து தருமாறு கேள்" என்று கூறி மறைந்தார்.

சங்கிலியார் கைகுவித்துத் திருமாலுக்கும், பிரமற்கும் காணரிய சிவபெருமான், இந்த அந்தரங்கத்தை எனக்கு அறிவித்ததனுல் அடியேனுகப் பேறு பெற்றேன் என்று கண்ணீர் வாரத் திருவடியில் வணங்கித் துயிலகன்று தாதியரை எழுப்பி இறைவர் செய்கைகளை அவர்களிடம் கூறினுர்;

அப்பொழுது திருப்பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுக்கும் பொழுது அணுகியது. சங்கிலியார் சேடியருடன் நீராடித் திருக்கோயிலுக்குச் சென்ருர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அடியார்களுடன் அங்கு சென்று சபதம் புரியும் பொருட்டு சங்கிலியார் வரவை எதிர் நோக்கி நின்ருர். சங்கிலியைக் கண்ட சுந்தரர் அணங்கரசே நான் உன்னைப் பிரியேன்" என்று சபதம் செய்கிறேன் சந்நிதிக்கு வருக" என்று அழைத்தார். சங்கிலியார் நாணத்தினுல் பேசவில்லை. அவரது கனவில் விபரத்தை அறிந்த சேடியர் ஆரூரரை நோக்கித் தாங்கள் இதற்காக இறைவன் திரு முன்பு சபதம் செய்ய வேண்டியதில்லை. கோயில் வெளிச் சுற்றிலுள்ள மகிழ மரத்தடியில் சபதம் செய்தால் அதுவே போதும்" என்றனர்.

நம்பியாரூரர் மனம் மருண்டார், ஆயினும் இவர்கள் சொன்னபடி செய்ய மறுத்தால் பரிகசிப்புக்கு ஆளாக நேரிடும் என்று உணர்ந்து சரிவாருங்கள் என்ருர். ஒப்பில்லாத் தவமுடைய சங்கிலியார் காண மணம் நிறைந்த மலர்கள் பூத்த மகிழ மரத்தை மும்முறை வலம் வந்து "இங்கு மேவாது நான் அகலேன்" என்று சபதம் செய்தார். இன்றும் திருவொற்றியூரில் "மகிழடி சேவை" என்ற திருவிழா ஆண்டு தோறும் நடை பெறுகிறது.

அன்றிரவே திருவொற்றியூர் இறைவர் அவ்வூர்த் தொண்டர்களுடைய கனவில் தோன்றி நம்பி ஆரூரனுக்கு நங்கை

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]

5 41

# அலங்கார நாயகன் 25

திருமதி ஆர். பார்வதிஅம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

## வள்ளியை வேட்டவன்

செந்தமிழ் நாட்டில் தமிழ் பேசுவோருடைய குலத்தில் திருஅவதாரம் செய்த எம்பிராட்டியாராகிய வள்ளியம்மையை மணந்தவர் என்பதனாலும் முருகன் செந்தமிழ் பிரியன்என்பது தெளிவாகிறது.

"தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்" —குமரகுருபரர்.

செந்தில் வாழ் செந்தமிழ்க் கடவுளாகிய செவ்வேட் பரமன். தமிழ்த் தெய்வம், தமிழ் விருப்பர், தமிழ் மாலையர்.

நக்கீரர், பொய்யாமொழி, அருணைநாதர், சிதம்பரஅடிகள், குமரகுருபரர், இராமலிங்க அடிகள், பாம்பனடிகள் முதலிய அடியார்கள் துதி செய்து அருள் பெற்றனரே அன்றி வைது அருள் பெற்றிலரே, அங்ஙனம் பெற்றவரைக் காண்போம்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சங்கிலியை நம் ஏவலினால் உலகறியக் கல்யாணம் செய்து கொடுங்கள் என்று உணர்த்தினர். தொண்டர்களும் ஊராரும் அதிசயித்தெழுந்து மகிழ்ச்சியுடனே தேவர்கள் பூமாரி பொழியக் கண்ணிறைந்த பெருஞ்சிறப்பில் இறைவன் அருளியவாறே திருமணம் செய்து கொடுத்தனர்.

முன்னே விதியின்படி இறைவன் திருவருள் துணை கொண்டு மணம் செய்து கொண்ட நம்பிகள் இலக்குமியின் அழகையும் வென்ற சங்கிலியாரின் பெண்மை நலத்தைக் கண்டும் கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும் வாழ்ந்தார். ஒற்றியூர் மேவிய நெற்றிக்கண் நிமலனை முப்போதும்போற்றி வாழ்ந்தார்.

(தொடரும்)

"மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழ வைப்போன்"

முருகன் வண்டுகள் மொய்க்கின்ற மலர்மாலையை அணிகின்ற குழலை உடைய வள்ளியை வேட்டவன், திருமணம் செய்து கொண்டவன். இங்கே முருகப்பெருமான் வள்ளியைத் தானே வேட்டு அடைந்தான். முருகப் பெருமான் சூரனைச் சங்காரம் செய்து மீட்டும் தம் வாழ்வைப் பெறச் செய்ததற்கு நன்றி அறிதலாக ஏதாவது செய்ய வேண்டும் என்று இந்திரன் முதலான தேவர்கள் நினைத்தார்கள். எம்பெருமான் திருமணக் கோலத்தைக் கண்டுகளிக்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று தன் பெண்ணாகிய தேவ சேனையை திருமணம் செய்து வைக்க விரும்பினான் இந்திரன். தேவர்களுடைய மகிழ்விற்காகத் தேவ சேனையை மணம் செய்து கொண்டான் முருகன், ஆனால் வள்ளிநாயகி இடத்தில் தானே காதல் செய்து அவள் விரட்டி ஓட்டினாலும் போகமாட்டேன் என்று காத்திருந்து அவள் அன்பை இரந்து நின்றான் வைவதே வாழ்த்தாகிற சந்தர்ப்பம் வேறு ஒன்று உண்டு. வடமொழியில் நிந்தாஸ்துதி என்று சொல்லுவார்கள். இறைவனைப் பார்த்துக் கூத்தன், பித்தன், குறை மதியுடையவன். என்றெல்லாம் சொல்லும் போது குறைவுபடுத்துவது போல இருந்தாலும் பொருளைப் பார்ப்பின் புகழாக இருக்கும். குறை மதியன் என்றால் குறைவான மதியுடையவன் என்று தோன்றும் ஆனால் பூரண சந்திரனல்லாமல் தலையில் குறைந்த பிறையை அணிந்தவன் என்பதே அதன் பொருள். பழிப்பது போலப் புகழ்தல் என்று தமிழில் சொல்வார்கள், இது ஓர் அலங்காரம்.

காளமேகப் புலவர் நிந்தாஸ்துதியில் வல்லவர், அவர் ஓர் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார். போகும் வழியில் இருட்டி விட்டது. அங்கே ஒரு பிள்ளையார் கோயில், அக் கோயிலின் திண்ணை மீது தம் கையில் இருந்த முடிச்சை வைத்துக் கொண்டு படுத்து உறங்கி விட்டார். காலையில் பார்த்தால் அவர் வைத்திருந்த முடிச்சைக் காணவில்லை. அவருக்குக் கோபம் வந்தது, பிள்ளையாரே உம்மை நம்பித்தானே

நான் இங்கே படுத்தேன்? என் முடிச்சை நீர் திருடிக்கொண்டு விட்டீரே எனக் கேட்கிறுர். உம்முடைய தம்பி யார் என்று எனக்குத் தெரியும். தமிழ்நாட்டுப் பெண் வள்ளியைத் திருடிக் கொண்டு போனவன் அவன். உம் தாயாருடன் பிறந்தமாமன் ஒரு வம்பன், மாமாயன். அவன்நெய்திருடி. நீரோ இப்போது என் முடிச்சைத் திருடி விட்டீர், எப்படி ஐயா கோத்திரத் திற்கு உள்ள குணம் உம்மை விட்டுப் போகும்? என்று கேட்கிறுர்.

"தம்பியோ பெண்திருடி, தாயாருடன் பிறந்த
வம்பனே நெய்திருடி, மாமாயன் – அம்புவியில்
மூத்த பிள்ளையாரே முடிச்சவிழ்த்தீர், – போமோ
கோத்திரத்திற் குள்ள குணம்"

வசவுபோன்று தோன்றும்படி இறைவன் புகழை முத்தமிழால் சொல்கின்றனர் புலவர்கள். அந்தத் தமிழைக் கேட்பதில் இறைவனுக்கு விருப்பம் உண்டு. அருணகிரி நாதரும்,

"சேணெ ணுயிடு மிதண்மே லரிவையை
மேவி யேமயல் கொளலீ லைகள்செய்து
சேர நாடிய திருடா"

என்று வைது அருள் பெற்றதைக் காணலாம். அங்கு என்ற பதம் அருமையானது. ஒருவனை ஒருவன் வையப்பட்ட இடத் தில் மிக்க சிற்றம் எழும், நம் கந்தவேள் எங்கே தமிழால் வைவார்களோ, அவர்களை அங்கேயே வாழ வைப்பாராம். என்ன அருமை? என்ன அருள்? அப்பனுக்குத் தமிழிலுள்ள ஆர்வம்தான் என்னே? கந்தவேளுக்குத் தந்தையாகிய சிவபெரு மானும், தமிழ் வேட்கையால் மதுரையில் நாற்பத்தொன்பது புலவரில் தாமொருவராயிருந்து தமிழ் ஆராய்ந்ததும், மதுர வாசகமாகிய திருவாசகம் கேட்கும் பொருட்டு மண் சுமந்து அடிபட்டதும், இரவில் ஒரு காலன்று இருகால் பரவை நாச்சி யார் வீட்டிற்கு தம்வேதம் காணுத வித்தகத் திருவடிசிவக்கத் தூது சென்றதும், இத்தமிழின் பொருட்டன்றோ?

"பித்தா" என்று வைத சுந்தரருக்கு ஐராவணம் அனுப் பிய அருள் தன்மையை உன்னும்தோறும், உன்னுந்தோறும், உள்ளத்தில் உவகை ஊற்றெடுக்கின்றது.

"இந்திரன் மால்பிரம னெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளவென்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திரமா முனிவரிவ னாரென எம்பெருமான்
நந்தம னூரனென்றான் நொடித்தான்மலை யுத்தமனே"
— சுந்தரர் தேவாரம்.

"பித்தனென் றொருகால் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்" — திருவிசைப்பா.

முருகப் பெருமான் தமிழால் வைதாலும் வாழ வைப்பரென்று விளங்குவதால் வாழ்த்தினார்க்கு அவர் எத்தகைய அருள் புரிவார் என்பது கருதற்பாலது. அப்பரம பதியை அடையும் நெறிகளில் தலை சிறந்தது அரிய பெரிய தமிழால் அவரை வாழ்த்தி வணங்குதலாம்.

"கனத்த செந்தமிழால் நினையே தினம்
நினைக்கவும் தருவாய்"
"வண்டமிழ் விநோதம் அருள்வாயே"

என்று சுவாமிகளே பிற இடங்களில் விண்ணப்பித்துள்ளார். முருகப் பெருமானுடைய அன்பைப் பெற வேண்டும் என்று அருணகிரிநாதர் விரும்புகிறார். அது மிக எளிதில் கிடைக்க வேண்டுமானால் வள்ளியைப் பிடித்தால்தான் நடக்கும். அவருக்கு மகிழ்ச்சி உண்டாகும். முருகனுக்கும் அவர்பால் அன்பு உண்டாகும். பொதுவாகப் பெண்களுக்குத் தங்கள் தந்தையைப் புகழ்ந்தால் மகிழ்ச்சிஉண்டாகும். எனவே தம்முடைய பாட்டிலே நேரே முருகனைப் பாடினாலும் கூட அவன்திருமாலுக்கு மாப்பிள்ளையாக இருப்பதால் பின் இரண்டடிகளில் ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தியைப் புகழ்ந்து சொல்கிறார்.

"வெய்ய வாரணம் போல்
கைதான் இருபது உடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன்"

இராவணனை எடுத்த எடுப்பில் "வெய்ய வாரணம் போல்" என்றார். யானைக்குப் பிரதானமானது துதிக்கை. எனவே யானை என்றவுடன் கை நினைவுக்கு வருகிறது. "வெய்யவாரணம் போல் கைதான் இருபது உடையான்" என்றார். மதம் பிடித்த யானைத் தன் துதிக்கையினால் எல்லாவற்றையும் பற்றி

இழுத்து நாசம் செய்யும். மற்றவர்கள் சுகத்திற்கு எவை பொருளாக இருகின்றனவோ. அவற்றை வாரி எடுத்தகைகள் இராவணனுடைய இருபது கைகள், சீதையை அந்தக் கைகள் தாமே எடுத்துச் சென்றன. மதம்கொண்ட யானையைஉவமை கூறுவது எவ்வளவு பொருத்தம்.

மாமாவைச் சொன்னவர் அந்த உறவுக்குக் காரணமான அம்மாவையும் சொல்கிறார். 'உமையாள் பயந்த இலஞ்சியமே' உமையாள் பெற்ற குழந்தை முருகன். இலஞ்சி—குளம், சரவணப் பொய்கையில் வெளிப்பட்டவர். வள்ளியை மணந்துக் கொண்டவன் முருகன். அதனால் தமிழில் ஆர்வம்உடையவன் முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கிறவன். இராவண சங்காரம் செய்த இராமச்சந்திர மூர்த்தியின் மருமகன், உமையவளின் அருமைக் குழந்தை என்று முருகனுடைய புகழை அலங்காரமாகச் சொல்கிறார் அருணை முனிவர்.

''மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன், முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்
போன், வெய்ய வாரணம் போல்
கைதான் இருபது உடையான்
தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்த இலஞ்சியமே''

———

(தொடரும்)

# சைவ சமயத்தின் மாண்பு 6

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்,
இளவரசு, மதுரை ஆதீனம்.

கடவுள் உருவத்தோடு இருக்கிறாரா? நாம் வழிபடுவது கடவுளுக்குத் தெரியுமா? நைவேத்தியம் படைப்பதை ஏற்றுக் கொள்வாரா அலங்காரங்கள் செய்வதையும், தேர்த்திருவிழாக்கள் நடத்துவதையும் குறித்து மகிழ்வாரா? என்றெல்லாம் கேட்கின்ற அனைவருக்கும் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் பதில் சொல்ல வேண்டியது கற்றவர்களின் தலையாய கடமையாகும்,

கற்றவர்களில் பலருங்கூட, கடவுளுக்கு உருவம் கிடையாது. அவருக்குரிய உருவங்களையெல்லாம் மனிதர்களே உண்டாக்கிக் கொண்டார்கள் என்று சொல்லி வருகிறார்கள். இவ்வாறு கூறுகின்றவர்களையெல்லாம் மறுத்து சிவஞான சித்தியாரில்; கடவுளைப் பற்றி அவரது அருவநிலை, அருவுருவநிலை, உருவநிலை ஆகியன குறித்துக் கீழ்க்கண்டவாறு கூறப்பெற்றிருக்கிறது.

"சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்து அருளும் உருத்திரன்தான் மால்அயன் ஒன்றின் ஒன்றுய்ப்
பவந்தரும் அருவம் நால் இங்கு உருவம்நால் உபயம் ஒன்றும்
நவந்தரும் பேதம் ஏகநாதனே நடிப்பன் என்பர்" 164

இப்பாடலின் பொருள்: உருவம்ஒன்றும் இன்றி ஏகனாய் நிற்கும் பரமசிவனே, சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், மால், அயன் என்ற ஒன்பது பேத வடிவங்களையும் தாங்கி நின்று, பஞ்ச கிருத்தியங்களை செய்கின்றான் என்பதாகும்.

அடுத்ததாக, கடவுள் உருவத்திருமேனி தாங்காவிட்டால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்ச கிருத்தியங்களும் நடைபெறாது என்பதை,

"படைப்பாதித் தொழிலும் பத்தர்க்கு அருளும் பாவனையும் நூலும்
இடப்பாக மாதராளோடு இயைந்து உயிர்க்கு இன்பம் என்றும்
அடைப்பானும், அதுவும் முத்தி அளித்திடும் யோகும், பாசம்
துடைப்பானும் தொழிலும்,மேனி தொடக்கானேல் சொல்லொணுதே"74

என்ற பாடல் விளக்கிக் கூறுகின்றது.

கடவுள் உருவத் திருமேனி தாங்கி, இவ்வுலகத்தையும் நமது உடல்களையும், நமக்குவேண்டிய போகப் பொருள்களையும் திருவருள்பாலிக்காவிட்டால், யாரும் அவரை அறிந்து கொள்ள முடியாது. அதனுலேயே, மாணிக்கவாசக சுவாமிகள் 'மூவரும் அறிகிலர், யாவர் மற்று அறிவார்?' என்று அருளியிருக்கின்றுர்.

இவ்வுலகத்தில் எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. ஆனுல், கடவுளை அருவத்திலோ, அருவுருவத்திலோ, எவ்வித உருவத்திலோ, எந்தமொழியிலோ வழிபட்டாலும் அதற்குரிய பலனைத் தரக்கூடியவர் ஒருவரே என்பதை இந்துமதம் ஒன்றே வலியுறுத்திக் கூறுகின்றது. அதனுலேயே,

"மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டு அங்கு இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றி வாழும் செயல் அறமானுல் யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்கும் செயற்கு முன்னிலையாம் அன்றே" 114

என்றும்,

"யாதொரு தெய்வம் கொண்டீர், அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனுர்தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையும் செய்யும்
ஆதலால் இவை இலாதான் அறிந்து அருள் செய்வன் அன்றே. 115

என்றும் சிவஞானசித்தியார் தெளிவுபடுத்துகின்றது.

கடவுள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் நிகழ்த்துவிப்பதற்கு அவர் உருவத்திருமேனி தாங்கவேண்டியதிருக்கிறது என்பதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறேம். உருவத் திருமேனி தாங்காத பொழுது எவ்விதப் பற்றும், தொடர்பும் இல்லாத பரசிவமாக இருக்கின்றுர். ஆனுல், உருவத் திருமேனி தாங்கும்

பொழுது சக்தியுடன்கூடி, ஐந்தொழில்களையும் செய்கின்றார். இதனை அறியாதவர்களே, அவருடைய அருவநிலையை மட்டும் கூறிக்கொண்டிருப்பார்கள். இந்நிலையைத் தெளிவுபடுத்தவே சிவஞானசித்தியாரில் ஸ்ரீஅருள்நந்திச் சிவாச்சாரியார்,

"கற்றநூற் பொருளும், சொல்லும் கருத்தினில் அடங்கித் தோன்றும்
பெற்றியும் சாக்கிராதி உயிரினில் பிறந்து ஒடுக்கம்
உற்றதும் போல எல்லா உலகமும் உதித்து ஒடுங்கப்
பற்றொடு பற்றதின்றி நின்றனன் பரனும் அன்றே" 51

என்று அருளியிருக்கின்றார்.

இப்பாடலின் பொருள்; முதல்வன் சத்தி வடிவினனாய் நின்று பிரபஞ்சத்தைக் காரியப்படுத்தும் அவதரத்திலே தொடக்குறுவோனாகியும், சத்தி வடிவம் பொருந்தாது சுத்த சிவமாயிருக்கும் அவதரத்திலே தொடக்குறுதல் இலனாகியும் நிற்பன்" (பேராசிரியர் கொழும்பு திரு. மு. திருவிளங்க தேசிகர் உரை)'

அடுத்து இதற்கு முன் குறிப்பிட்ட சிவம், சத்தி, நாதம்' விந்து, சதாசிவம், மகேசுவரன், அரன், அரி, அயன் என்ற ஒன்பது பேதங்களாக இருக்கின்ற சுத்த சிவமானது, சத்தியுடன் இருக்கும் நிலையில், எத்திறம் ஈசன் நின்றான் அத்திறம் சத்தியும் நிற்பாள் என்பதைக் குறித்து,

"சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மனி தானாகி
ஒத்துறு மகேசையாகி உமைதிரு வாணியாகி
வைத்துறுஞ் சிவாதிக்கு இங்ஙன் வரும் சக்தி ஒருத்தியாகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" 165

என்று சிவஞான சித்தியார் பாடல் விளக்கம் தருகின்றது.

எனவே, முழுமுதற் பரம் பொருளாகிய இறைவன், அங்கிங்கு எனாதபடி, எங்கும் பிரகாசமாய் ஆனந்தப் பூர்த்தியாகி இவ்வுலகை ஆண்டு வருவது அவனின் சொரூப இலக்கணமாகும் என்பதில்ஐயமில்லை. அப்படிப்பட்ட பெருங்கருணைப் பெம்மானின் அருளைப் பெறவேண்டுமானால், முதலில் குருநாதனின் அருள்வேண்டும். இருளை அருளால் போக்குபவனே குரு. குருவருள் இன்றித் திருவருள் இல்லை. இறைவன்

அருளைநாம் நேரே பெறமுடியாது. குருவின் மூலமாகத்தான் நாம் இறையருளைப் பெறமுடியும். நம்மைப் பற்றியுள்ள மலங்களைப் போக்கிக் கொள்ளமுடியும். மலம் பஞ்சு போன்றது. எரிக்கத் தக்கது. இறைவன் சூரியனைப் போன்றவன். இறைவன் நமக்கு எட்டாத நிலையில் தொலைவில் உள்ளான். சூரியன், தானே நேராகப் பஞ்சை எரிக்க முடியாது. சூரிய காந்தக் கல்லின் வழியாகவே சூரியன் பஞ்சை எரிக்கமுடியும்.

எனவே, சூரிய காந்தக்கல் குருவைப் போன்றது. சூரியனின் வெப்பத்தைத் தன்பால் ஏற்கத் தக்கது. அதுபோல, குரு, இறைவனின் அருளைத் தன்பால் தேக்கி நிற்பவன். சூரிய காந்தக் கல்லின் வழியாகவே சூரியனின் வெப்பம் ஊடுருவி நின்று பஞ்சை எரிக்கும். அதுபோல், குருவின் வாயிலாகவே இறைவனின் திருவருள் உயிர்களின் மும்மலங்களைப் போக்குதல் இயலும். குருவின் உதவியின்றி உயிர்கள் இறைவனின் அருளைப் பெறமுடியாது. இறைவனும், குருவின் வாயிலாக அன்றி, உயிர்களுக்கு நேரே அருள்செய்ய இயலாது. சூரியன் இறைவன். சூரியனின்வெப்பம் அல்லது நெருப்பு திருவருள். சூரியகாந்தக்கல் குரு. பஞ்சு எரிக்கத்தக்க மும்மலங்கள், இவ்வுண்மையினை.

> "சூரிய காந்தக் கல்லின் இடத்தே செய்ய
> சுடர் தோன்றியிடச் சோதி தோன்றுமா போல்
> ஆரியனும் ஆசான் வந்து அருளால் தோன்ற
> அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் தோன்றத்
> தூரியனும் சிவன் தோன்றும் தானும் தோன்றும்
> தொல்லுலகம் எல்லாம் தன்னுள்ளே தோன்றும்
> நேரியனுய்ப் பரியனுமாய் உயிர்க்கு உயிராய் எங்கு
> நின்றநிலை எல்லாம் முன் நிகழ்ந்து தோன்றும்" 280

என்ற சிவஞானசித்தியார் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

(தொடரும்)

# வாக்குறுதி

வித்துவான் கோ. கோவிந்தசாமி அவர்கள்.
தமிழாசிரியர், திருமுக்கூடல் (அஞ்சல்)
செங்கற்பட்டு மாவட்டம்.

ஆதவனுடைய மறைவினால் உலகை இருள் சூழ்ந்தது. புள்ளினங்கள் தம்தம் கூட்டை நோக்கிப் பறந்து சென்றன. அலுவலங்களில் பணிபுரிபவர்களும், வேறு பணிகளில் இருப்பவர்களும்தம் இல்லம் நோக்கி விரைந்த வண்ணமிருந்தனர். வானில் விண்மீன்கள் மின்னிக்கொண்டிருந்தன. காரிருளாயினும் அகற்றிவிட இயலும் என்பது போல் மின்விளக்குகள் ஒளியை வீசியவண்ணமிருந்தன. மருதூர் பேருந்து வண்டி நிலையத்தில் மக்கள் கூட்டம் அதிகமில்லையெனினும் வண்டிகள் வந்து போய்க் கொண்டிருந்தன. இரவு மணி ஒன்பது என்பதை அறிவிப்பதுபோன்று பேருந்துவண்டி நிலையத்திலிருந்தமணிப் பொறி ஒன்பது முறை ஒலியை எழுப்பி ஓய்வெடுத்துக் கொண்டது. அதேசமயம் நிலையத்திற்குள் நுழைந்தமுத்தழகர் தம் எதிரே வந்த ஒருவரிடம் திருச்செந்தூர் செல்ல வண்டி எப்போது வரும் என வினவினர், இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடும் என்று எதிரே வந்தவர் கூறியதும் அமைதியுடன் அங்கிருந்த ஓர் இருக்கையில் அமர்ந்தார். அவரின் அருகே அவருடைய பெட்டி இருந்தது. அப்பெட்டியைப்பார்த்தவாறு சிந்தனையிலாழ்ந்தார் முத்தழகர்.

மருதூரில் ஓர் சிறந்த செல்வந்தராகத் திகழ்ந்தவர் முத்தழகர். நற்பண்புகளுக்கு உறைவிடமானவர். முருகப் பெருமானிடம் எல்லையற்ற அன்பு கொண்டவர். உண்பதையோ மற்ற செயல்களைச் செய்வதையோ அவர் மறந்திருப்பினும் இருப்பார். எப்போதும் ஆறுமுகப்பெருமானை வழிபடுவதற்கு அவர் மறப்பதில்லை. ஒவ்வொரு நாளும் முருகன் எழுந்தருளி

யிருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வருவதைத் தன் கடமையாகக் கொண்டிருந்தார்.

அவரின் தன்மைக்கேற்ப வாய்த்த இல்லத்தரசி திலகவதி பதிசொற்கடவாத பாவையாகவும், பின் தூங்கி முன் எழும் காரிகையாகவும் இறையுணர்வு மிக்க நங்கையாகவும் விளங்கினாள். இவர்களுக்கு அன்பு மகளாகத் தோன்றிய கலைவாணி தம் பெற்றோர் சொற்கடவாது கல்வி கேள்விகளிற் சிறந்தவளாகத் திகழ்ந்தாள்.

ஒருநாள் தன் துணைவியுடனும், மகளுடனும் திருச்செந்தூர் சென்ற முத்தழகர் அங்கு திருக்கோயிலுள் உறையும் முருகப் பெருமானை வழிபட்டபின் கோயிலின் உட்புறத்தைச் சுற்றிப் பார்த்தவாறு சென்று கொண்டிருந்தார்.

நண்பரே...நலமா என்ற குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்த அவர் அடுத்த நிமிடம் வியப்பினால் நீயா என்றார்

ஆமாம், நானேதான் உமது பள்ளி நண்பன் நீலமேகம் என்றார் முத்தழகரின் நண்பர்.

நாம் சந்தித்து நீண்ட நாட்களாகி விட்டது, இது எதிர்பாராத சந்திப்பு என்றார் முத்தழகர்.

நான் தங்களைத் தங்கள் இல்லத்தில் சந்திக்க எண்ணியிருந்தேன். என்னுடைய துணைவியும் மகன் குமரேசனும் விரும்பியதால் நானும் இங்கு வந்தேன், எதிர்பாராமல் தங்களைச் சந்திக்க நேர்ந்தமைக்கு மகிழ்ச்சி.

நண்பரே தங்களை அடிக்கடி சந்தித்து மகிழ நானும் எண்ணியுள்ளேன். உமதுவருகையை அன்புடன்எதிர்நோக்குகிறேன், என்னை நீர் மறந்துவிடாமலிருப்பின் அதுவேபோதும்

உங்களை நான்மறப்பதா...தக்க சமயத்தில் நீங்கள்செய்த உதவிகளையெல்லாம் எண்ணும் போது தங்களுக்கு எவ்விதம் நன்றி செலுத்துவது என்று தெரியவில்லை,

நம் நட்பு என்றும் நிலைத்து நிற்கவே நானும் விரும்புகின்றேன், அதற்கு.........

என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள், உங்களுக்காக நான் எதையும் செய்யத் தாயாராயிருக்கிறேன்.

நண்பா...இன்று ஓர் நன்னாள், நம்நட்பு என்றும் நிலைத்து நிற்க ஒரு முடிவு எடுத்துக் கொள்வோம்.

என்ன முடிவு,

முடிவைச் சொல்கிறேன், நீமுழுமனதுடன் இசைந்தால் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும்.

சொல்லுங்கள் நான் எதையும் செய்யத் தயாராயிருக்கிறேன்.

உன் அருகில்இருக்கும் உனது மகனையும், என்மகளையும் பிற்காலத்தில் ஒன்று சேர்த்து நம் நட்பை நிலைநிறுத்த விரும்புகிறேன். என்னுடைய விருப்பத்திற்கு நீ இசைவாயா?......

நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்களோ என எண்ணினேன். நான் தங்களிடம் கேட்க இருந்ததையே கேட்டு விட்டீர்கள். உங்கள் மகளை எனது மருமகளாக்கிக் கொள்ள நான் என்றோ முடிவு செய்து விட்டேன்.

உண்மையாகவா......

உறுதியாகத்தான் சொல்கிறேன், முருகப் பெருமான் கோயிலில் நின்று பேசும் நான் என்றும் எனது வாக்கைக் காக்க முயல்வேன்,

நானும் உங்கள் மகனுக்கே என் மகளை அளிக்க முடிவு செய்துவிட்டேன், நம் எண்ணத்தை முருகன்தான் நிறைவேற்றி வைக்க வேண்டும்.

நிச்சயம் நிறைவேற்றுவார் என்று கூறி முத்தழகர் கைகளைப்பற்றிக் கொண்டார் நீலமேகம்.

அதே சமயம் சிறுவன் குமரசேனும், சிறுமி கலைவாணியும் கள்ளங்கபடமின்றி வெள்ளை உள்ளத்துடன் உரையாடி மகிழ்ந்தவாறு இருந்ததைக் கண்டு முத்தழகரும் நீலமேகமும் மகிழ்ந்தனர்.

காலம் எவருக்காகவும் காத்திராமல் விரைந்து சென்று கொண்டிருந்தது.

சிறுவனாக இருந்த குமரேசன் இளைஞனாக மாறினான், உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்துவிட்டுக் கல்லூரியிலும் கல்வி பயின்று கொண்டிருந்தான்.

சிறுமிகலைவாணியோ எழில்மங்கையாக மாறினாள், அவள் குழந்தையாக இருந்தபோது முத்தழகருக்கு இருந்த செல்வம் அவளின் மணவயதில் இல்லை. நடுத்தரகுடியைச் சார்ந்தவராக அவர் விளங்கினார். ஆனால் அவரின் நண்பர் நீலமேகமோ முதலில் ஏழ்மை நிலையிலிருப்பினும் குமரேசன் கல்லூரியில் பயில முயன்றபோது செல்வம்மிக்கவராக விளங்கினார், இது காலம் செய்த திருவிளையாடல்களில் ஒன்றாகும்.

மணப் பருவத்திலிருந்த கலைவாணியை உயர்நிலைப்பள்ளி வரை பயிலச் செய்துவிட்டுப் பின் தன் இல்லத்திலேயே நிறுத்திக் கொண்டார் முத்தழகர். பல ஆண்டுகளாக அவர் நீலமேகத்தைக் காணாததால் எ ப் ப டி யு ம் நண்பனைக் காண வேண்டும், மகளைத் தம் நண்பன் மகனுக்களித்து மகிழவேண்டும் என எண்ணியவாறு இருந்தார்.

அன்றொரு நாள் வெளியூர் சென்று திரும்பிக் கொண்டிருந்த அவர் தம் எதிரே கார் ஒன்று வருவதைக் கண்டு சிறிது நின்றார்.

கார் அவரருகே வந்துநின்றது, காரில் வந்தவரைக்கண்ட போது முத்தழகருக்குத் திகைப்பு ஏற்பட்டது, தாம்காண்பது கனவா நனவா என்று உற்று நோக்கினார். கனவில்லை என அறிந்ததும் நண்பா என்றழைத்தார்.

யாரைய்யா நீர்......என்னை நண்பனென்று அழைப்பது என்றது காரிலிருந்த உருவம்.

நீலமேகம்...என்னை தெரியவில்லையா? நான்தான் உன் நண்பன் முத்தழகன்......

என்னை நண்பனென்று பலர் சொல்லிக் கொள்கிறார்கள், அவர்களுள் நீரும் ஒருவர்......

இல்லை...என்னைச் சாதாரண நண்பனுகக் கருதிவிடாதே, உன் உயிர் நண்பன் நான். உன்னுல் பாராட்டப்பட்டவன், நீலமேகம்......பல ஆண்டுகளுக்கு முன் நாம் திருச்செந்தூர் கோயிலில் எடுத்துக் கொண்ட உறுதிமொழியை மறந்து விட்டாயா?

உறுதி மொழியா...எனக்கு எதுவும் நினைவில்லை.

உன் மகனுக்கு என் மகளை மணம் புரிவித்து அவர்களை ஒன்று சேர்ப்பதாக கூறினுயே அது......

என்ன? உன்மகளை என்மருமகளாக்கிக் கொள்ளவிரும்பி வாக்களித்தேனு? நான் ஓர் பெரிய செல்வந்தன், என் மகன் கல்லூரியில் பயில்பவன். அவனுக்கு நடுத்தர நிலையிலுள்ள உன்மகளை மணமுடித்துக் கொள்வதா? இது முடியாதசெயல் எப்போதோ ஏதோ சொன்னதை வைத்துக் கொண்டு இன்று அதை நினைவுபடுத்துகிறீர்...முத்தழகரே......நான் அவ்விதம் சொன்னதற்கு யார் சாட்சி.

முருகப் பெருமான்,

முருகப் பெருமானு...சிலைவடிவில் நிற்கும் அவராசாட்சி உலகம் தெரியாத மனிதரய்யா நீர்......அந்த முருகன் சாட்சி என்று கூறுகிறீரே அவர் இப்போது வருவாரா?......என் மகனுக்கு உன் மகளைத்தான் மணமுடிக்க வேண்டும் என்று சொல்வாரா? அல்லது என்னுடைய மகனுக்கு வேறு இடத்தில் பார்த்துள்ளபெண்ணை அவன் மணக்காதபடி செய்துவிட அவரால் முடியுமா?

நீலமேகம் நீ இவ்விதம் மாறுவாய் என்று எதிர்பார்க்க வில்லை. அந்த முருகன் நினைத்தால் இந்தத் திருமணம் நடைபெற்றே தீரும். நானும் நீயும் நம் மக்களைப் பிரிக்க முயன்ருலும் அது முடியாது.

நான் பிரிக்கத்தான் போகிறேன், கோடி கோடியாகப் பணம் வைத்துள்ள ஒருவரின் மகளை என் மகனுக்கு மணமுடிக்க என்றே முடிவு செய்துவிட்டேன். அதை மாற்ற உன்னுலும் முடியாது. நீ வழிபடும் அந்த முருகனுலும் முடி

யாது. நீர் சென்று வேறொரு இடத்தில் மணமகனைத் தேர்ந்தெடுத்து உமது மகளுக்கு மணமுடித்து வையும். என்னையும் என் மகனையும் மறந்துவிடும்.

நீலமேகம்...என் மகளுக்கு ஓர் மணமகன் கிடைக்காமல் போகமாட்டான். கொடுத்த வாக்கை மறந்துவிடாமல் உன் வருகைக்காகவே இவ்வளவு நாட்கள் காத்திருந்தேன். இன்று நீயே இவ்விதம் கூறியபின் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. இறைவன் விட்டவழி நடக்க நானும் தயாராக உள்ளேன்.

முத்தழகர் இவ்வாறு நவின்றதும் நீலமேகம் தன்காரோட்டியிடம் காரை விரைவாகச் செலுத்துமாறு கூறிவிட்டு அவரைத் திரும்பியும் பார்க்காமல் சென்று விட்டார்.

நீலமேகத்தின் செயலால் வருந்திய முத்தழகர் செந்தில் குமரனின் அருள் எப்படியோ அப்படியே நடக்கட்டும் எனக் கருதியவாறு தம் இல்லம் சென்றார்,

உடனடியாகத் தம்முடையமகள் திருமணத்தைமுடித்து விட விழைந்து செல்வந்தர் ஒருவர் மகனுக்கு மகளைத் தர ஒப்புதல் அளித்தார்.

அந்த செல்வந்தர் கேட்டவாறு மணமகனுக்கு ரூபாய் பத்தாயிரம் அன்பளிப்பாகத் தரவும் ஒப்புக் கொண்டார். திருச்செந்தூரிலேயே திருமணம் நடைபெறுவதற்கு ஆவன செய்தார். தம் துணைவி, மகள், உறவினர்கள் அனைவரையும் முன்னதாக அனுப்பிய அவர், தாம் அன்று இரவு வருவதாகக் கூறி அதன்படியே புறப்பட்டார்.

மனிதருடைய மனமாறுதலை எண்ணியவாறு இருந்த முத்தழகர் பேருந்து வண்டி ஒன்று விரைந்து வந்து நிற்கும் ஒலி கேட்டுத் தன் உணர்வு பெற்று அந்த வண்டியில்ஏறினர் மக்கள் கூட்டம் அதிகமில்லாததால் ஓர் இருக்கையில் அமர்ந்தார்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# "அமுது"

புலவர், திரு, எ. மாணிக்கம் அவர்கள்,
''முருக நிலயம்''
விசூா

---

'வணக்கம் சுவாமி'

'ஓ.........ஆறுமுகமா? வா தம்பி வா, என்ன? இப்போ தெல்லாம் இந்த மடத்துப் பக்கமே வருவதில்லை ஒருவேளை மடத்துப்பக்கம் வருவதே மடம்என்று எண்ணுகிருயா?''ம்..!

'சிவ சிவா' அப்படியெல்லாம் ஏதும் இல்லிங்க சுவாமி, மடத்துப் பக்கம் வந்தாலே என் மடமெலாம் நீங்குமே;நேரம் கிடைக்கவில்லை சுவாமி...அவ்வளவுதான்,

ஓ...அப்படியா......சரிசரி...அது இருக்கட்டும் இப்போ தெல்லாம் 'குமரகுருபரன்' இதழுக்குக் கூட கட்டுரைகள் எழுதுவதைக் காணுேமே' ஏன்? அடியோடு 'குமரகுருபரன்' நினைவே இல்லையா? தம்பி'.

'நினைவு இல்லையா? சிவ சிவா...வழுக்கி வீழினும் அவன் திருப்பெயர் ஒன்றையே என் நாவமுத்துமே சுவாமி'

'தம்பி...உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா? தெரியும், இறைவனை வழுத்திஞல் மட்டும் போதுமா? சமயத் தொண்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சில நிமிடங்களுக்குப் பின் பேருந்து வண்டி புறப்படு வதற்கான ஒலிஎழுந்தது. அப்போது விரைவாக வந்துவண்டி யில் ஏறிய இளைஞன் ஒருவன் முத்தழகர் அருகே சென்று அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தான், பேருந்து வண்டி விரைந்து சென்றவாறு இருந்தது.

---

(தொடரும்)

டும் ஆற்ற வேண்டும். இன்றைய உலகில் பல இதழ்கள் தீய வழிகளைச் செப்பி மக்களின் சிந்தையைக் கெடுக்கின்ற போது தூய வழிகளைச் செப்பி, பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டத் தனிச் செங்கோலோச்சி செந்திலாண்டவன் திருவருளால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'குமரகுருபரன்' போன்ற நம் சமய நல்லிதழ்களுக்கு நம்மாலான நல்ல கட்டுரைகளையும் எழுதவேண்டும் அல்லவா? அதனை மறக்கலாமா?'

'மறக்கவில்லை சுவாமி?'

'தம்பி! நீ என்னதான் சமாதானம் கூறினாலும் நான் ஏற்கமாட்டேன், உனக்கு நேரம் கிடைக்கவில்லை என்பது வெறும் சப்பைக்கட்டே தவிர தகுந்த காரணம் ஆகாது'.

'மன்னிக்க வேண்டும் சுவாமி இனிமேல் தொடர்ந்து எழுதுவேன்'.

'தம்பி......'இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர் விருந்தமிழ்தம்என்றாலும் வேண்டேன்' என்னும்உறுதியோடு தமிழ்ச் சேவை செய்த நம் சான்றோர்களைப் போல் நீயும் தமிழ்ச் சேவை நிறைய செய்ய வேண்டும்'.

'அப்படியே ஆகட்டும் சுவாமி'.

'தம்பி...'பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீர் இறைக்காமல்' வாழ்க்கையில் பயனுள்ள செயல்களைச் செய்ய வேண்டும். மேலும் ஒருவன் சோம்பல்இன்றி உழைக்கவேண்டும். ஒருவனுடைய சோம்பலிலே கரிய மூதேவி வாழ்கிறாள். சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியிலே திருமகள் வாழ்கிறாள், என்று வள்ளுவனும் கூறுகின்றான்.

''மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரை யினாள்''

'சுவாமி'

'தம்பி...போனது போகட்டும், வருந்தாதே இனியாவது சோம்பி இராமல் சுறுசுறுப்பாய்ச் செயல்படு......'

'ஆகட்டும் சுவாமி, செந்திலாண்டவன் திருவருளும் தங்களைப் போன்ற மகான்களின் ஆசியும் அடியேனுக்குத்

தொடர்ந்து இருக்குமேயானால் நற்பணிகளைத் தொடர்ந்து செய்வேன் சுவாமி'.

'தம்பி...தன்னை வழுத்திப் புகழ்ந்த தாசானு தாசனுக்கு, முன்னவனாய் நின்றெதையும் முடிக்கும் சிவகிரியான்' உனக்கு என்றும் அருள் புரிவான். கவலைப்படாதே.

'சுவாமி. அடியேன் வரும்போது தாங்கள் ஏதோ ...'

'முணுமுணுத்துக் கொண்டிருந்தேன் அல்லவா? தம்பி. அவரவர்கள் எதைஎதையோ எண்ணி முணுமுணுப்பார்கள். நானோ...'

'சிவசிவா... முணுமுணுத்தீர்களா? இனிமையாக மெல்லப்பாடிக்கொண்டிருந்தீர்கள் சுவாமி!

அதனை ...'

'மீண்டும் பாட வேண்டுமா? தம்பி!'

'தித்திக்குந் தெள்ளமிர்தைச்
சித்தாந்தத் துட்பொருளை
முத்திக்கு வித்தை
முதனினைப்ப தெக்காலம்'

என்னும் பத்திரகிரியாரின் பாடலைத்தான் மெதுவாகப் பாடி (Body) ஈடேற பாடிக்கொண்டிருந்தேன்.' 'சுவாமி...தங்களின் பேச்சு நகைச்சுவையோடு கூடிய நல்விருந்தாக இனிக்கிறது. சுவாமி! இப்போதெல்லாம் இவ்வையம்வாழ் மாந்தர் பலரின் வாய் எதை எதையோ பயனேதும் இன்றி முணுமுணுப்பதை விட்டு விட்டு இதைப்போல தேவாரப்பாடல்களை நாவாரப்பாடிக் கொண்டிருப்பது எவ்வளவோ நல்லதல்லவா சுவாமி.'

'ஆம்தம்பி. மிகமிக நல்லது. தவிரவும் தெய்வீகப் பாடல்களைப்பாடா விட்டாலும் தெய்வத் திருநாமங்களைச்சொல்லிக் கொண்டிருந்தாலும் போதுமே.'

'சுவாமி! பெரியோர்கள் எல்லாம் இறைவனைத் தேனாகவும், தெள்ளமுதமாகவும் காட்டிப் போந்ததன் காரணம் என்ன சுவாமி!

'தம்பி! உலகில் வாழும் சிறு குழந்தை முதல் வயதான பெரியோர்கள் வரை இனிப்பை விரும்பாதார் இல்லையல்லவா?'

'ஆம் சுவாமி'

'எனவேதான் இவ்வுலகோருக்கு இறைவன்பால் விருப்பம் ஏற்பட இறைவனைத் தேனாகவும், தெள்ளமுதாகவும் நம் முன்னோர் காட்டிப் போந்தனர்' தம்பி...

'சுவாமி'

'இறைவனைத் 'தேசனே தேனார் அமுதே' என்றார். மாணிக்கவாசகர்.'' ஆனால் நம் இராமலிங்க அடிகளாருக்கோ இறைவன் தேனாகவோ அமுதாகவோமட்டும் தோன்றவில்லை. இவை அனைத்தும் கலந்த சுவைக் கட்டியாகத் தோன்றுகின்றானாம், தெரியுமா தம்பி''

'சொல்லுங்கள் சுவாமி'

'அதாவது மா, பலா, வாழை என்னும் முக்கனிகளையும் தனித் தனியாகச் சாறுபிழிந்து கொள்ள வேண்டுமாம். பின் தெளியவைத்து வடித்தெடுத்து ஒன்றாகக் கலக்கவேண்டுமாம். அதனோடு சர்க்கரை, கற்கண்டுப் பொடி, தேன், பசுவின்பால், தேங்காய்ப்பால், முந்திரிப்பருப்பின்தூள், நெய் ஆகிய அனைத்தையும் கலந்து அடுப்பிலேற்றி அதிக சூடேற்றாமல் இளஞ்சூட்டிலேயே இறக்கி ஆறவைக்க வேண்டுமாம். பிறகுதுண்டு துண்டாக வெட்டி எடுக்க வேண்டுமாம். பின் சுவைக்க வேண்டுமாம் இவ்வாறு சுவை மிகுந்த கட்டியோடு மட்டும் இறைவனை ஒப்பிட்டுக் காட்டி நிறுத்தினாரா? நம் வள்ளலார், அதுதான் இல்லை. இச்சுவைக் கட்டியைவிடமிகுதியாக இனிக்கின்ற தெள்ளமுதே என்று இறைவனைக் கூவிஅழைக்கின்றார்'

'சுவாமி! நீங்கள் இதனைச் சொல்கின்றபோதேஅடியேன் நாவிலே நீர் ஊறுகிறது என்றால் அவருடைய அருட்பாவிலே அப்பப்பா....!எப்படித்தான்பாடினாரோ? சுவாமி...அப்பாடலை பாடுங்களேன்'

**'தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டிச்**
**சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக்கலந்தே**

தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளேந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடும் தெள்ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே!
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல் அணிந்தருளே!

'சுவாமி! அருமை...அருமை...! அற்புதமாக இனிக்கிறதே'

'தம்பி'

'சுவாமி'

'அற்புதமாக இனிப்பதால்தான் அவரே ஆண்டவனை 'எத்திக்கும் என்னுளம் தித்திக்கும் இன்பமே' என்று அழைக் கின்றார். மேலும், இறைவன் காயெலாம் கனியெனக் கனிவிக் கும் கருணைய முதமாகவும், கண்கண்ட தெய்வமாகவும் கலியுகத்தின் அற்புதக் காட்சியாகவும், கனக மலையாகவும், தாயாகவும், தந்தையாகவும், தலைவனாகவும் இருக்கின்றான். அத்தகைய இறைவனுடைய பெருமையைச் சாற்றிட வாயும், நினைத்திட மனமும், மதித்திட மதியும், அறிந்திட மன்னிய மெய்யறிவும் தித்திக்கின்றதாம். இவ்வளவும்கூறி அதில் வரும் இன்பத்தை இன்னதென்று கூற இயலவில்லையே என ஏங்கு கின்றார். இதோ அவர் தம் பாடல்......!

'காயெலாம் கனியெனக் கனிவிக்கும் ஒருபெருங்
கருணை யமுதே யெனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்
காட்சியே கனக மலையே
தாயெலாம் அனையவென் தந்தையே ஒருதனித்
தலைவனே நின்பெரு மையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
சார்கின்ற தோறும் அந்தோ
வாயெலாம் தித்திக்கும் மனமெலாம் தித்திக்கும்
மதியெலாம் தித்திக்கும் என்
மன்னியமெய் யறிவெலாம் தித்திக்கும் என்னிலதில்
வருமின்பம் என்புகலு வேன்
தூயெலாம் பெற்றநிலை மேலருட் சுகமெலாம்
தோன்றிட விளங்கு சுடரே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேயருட்
ஜோதிநட ராஜ குருவே!'

'சுவாமி...இப்பாடலைப் பாடிக் கொண்டே இருக்கலாம்போல் தோன்றுகிறதே'

'தம்பி! இப்பாடலை மட்டும்தான் பாடிக் கொண்டே இருக்கத் தோன்றுகிறதா? அருட்பாவிலே இருக்கின்ற அத்தனைப் பாடல்களையும் அணு அணுவாகச் சுவைத்துப் பாடிக் கொண்டே இருக்கலாம்போல் தோன்றுகிறது தம்பி. இதனால் அன்றோ, அச்சுதா அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும் இச்சுவைதவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்! என மறுத்தார் ஆழ்வார்'

'ஆம் சுவாமி'

'தம்பி! இறைவனுடைய திருநாமங்கள் எண்ண எண்ண இனிக்கும். நினைத்ததை அளிக்கும், மனத்தையும் உருக்கும், நிசிக்கருவறுக்கும். எனவே தெய்வ நினைவோடு, சதாசிவ (சதா—சிவ) நினைவோடு வாழ்வதே சீரிய நலம் பயக்கும்'

'சுவாமி'

'நாழியாகி விட்டதா தம்பி, நானும் பூசைக்குப் போக வேண்டும். போய் வருகிறாயா? அடிக்கடி வா தம்பி'

'அவசியம் வருகிறேன் சுவாமி, இன்றைய சந்திப்பு அடியேனுக்கு அதிக நன்மையாக இருந்தது'

'அப்படியா தம்பி நல்லது, இதோ......இந்தப் பாடலை அடுத்தமுறை வரும்போது மனப்பாடம் செய்து கொண்டுவா'

'சொல்லுங்கள் சுவாமி'

'பத்தித் திருமுகம் ஆறுடன்
பன்னிரு தோள்களு மாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண்
டேன்; செயல்மாண்ட டங்கப்
புத்திக் கமலத் துருகிப்
பெருகிப் புவனம் எற்றித்
தத்திக் கரைபுர ளும்பர
மானந்த சாகரத்தே'

'அமுதமான பாடல் சுவாமி, இப்பாடலைப் பாடியது யார்?'

'அருணகிரியார் தம்பி, கந்தர்லங்காரப் பாடல் இது'

'நல்லது சுவாமி; போய் வருகிறேன். வணக்கம்'

'போய்வா தம்பி'.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY



# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

தத்புருஷ தேவநாம
திரு. சு. இராமலிங்கம் அவர்கள்,
கணித ஜோதிடர், ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்
சீகம்பட்டி, K. புதுப்பட்டி P.o
இலாலாப்பேட்டை வழி, திருச்சி ஜில்லா

கோயில்:

9-வது பாசுரம்:

திருச்சிற்றம்பலம்

தோணு கணையானுங் குளிர்தா மரையானும்
காணுர் கழலேத்தக் கனலா யோங்கினுன்
சேணுர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேத்த
மாணு நோயெல்லாம் வாளா மாயுமே.

திருச்சிற்றம்பலம்

எட்டாவதுதிருப்பாசுரத்திலே உயிர்நோயைத் தீர்த்துக்கொள்ளும்வகையறியாது. மயங்கித் திரிகின்ற மாந்தருக்கு, தீர்த்துக் கொள்ளும் வகையையுணர்த்தியருளிய திருஞானசம்பந்த சுவாமிகள், ஒன்பதாவதாகிய இந்தத் திருப்பாசுரத்திலேமாணு நோய் எனப்படும், உடலை இழிவு செய்கின்ற உடல்நோயைத் தீர்த்துக் கொள்ளும் வழியையருளுகின்ருர் அழுதுலகை வாழ்வித்த கவுணிய குலாதித்தர். சிவாலயங்களிலே முதன்மையானதும் மாலறியா நான்முகனுங் காணுமலையாகிய எம்பெருமான் உயிர்களெல்லாம் உய்யும் பொருட்டு ஆனந்த தாண்டவம் புரிகின்றதும் பூமிதேவனுக்கு இருதய ஸ்தானமாக விளங்குவதும். பதஞ்சலி, வியாக்கிரபாதர், இரணியவர்மன், மாணிக்கவாசகர், திருநாளைப்போவார், திருநீலகண்டநாயனர், உமாபதி சிவாசாரியார் முதலிய எண்ணிறந்த பெருமையுடைய அடியார்கள் முத்தி பெற்றதும் பஞ்ச பூதங்களிலே ஐந்தாவதாய் மற்ற நான்கு பூதங்களுக்கும் இடங்கொடுப்பதாயுமுள்ள ஆகாயஸ்தலமெனப்படும். தில்லைச்சிற்றம்பலத்திலே

திருநடனம் புரிந்தருளும் தேவாதி தேவனை தரிசித்துப் பேரானந்தமடைந்த புகலிவித்தகர் அந்த வேளையிலும் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் கருணையினால்பூலோக கைலாயமாகிய இந்தத் திருத்தலத்திலே அருளிய திருப்பதிகத்தில், ஒவ்வொரு பாசுரத்திலேயும் தொழுது வழிபடுமடியார்களுக்குப் பயன் அறிவுறுத்து முறையிலே அருளுகின்றார், கருணைக் கடலாகிய திருஞானசம்பந்த சுவாமிகள், எட்டாவது ஒன்பதாவது இந்த இரண்டு திருப்பாசுரங்களிலும் நோய் தீரும் வகையை அருளுகின்றார். முதல் நோய் காரண நோய் இரண்டாவது நோய் காரிய நோய், வைத்தியரில் சிறந்தவராகிய சம்பந்த சுவாமிகள், நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் என்று திருவள்ளுவர் கூறியதற்கிணங்க காரண காரியமாகிய இரு நோயையும் ஒழித்துக் கொள்ள, இரு திருப்பாசுரங்களை அருளியுள்ளார். கூன் பாண்டியனுக்கு வந்த வெப்பு நோயும் கூனும், காரிய நோய் அதற்கு காரண நோய் சமணமென்னும் ஆணவ நோய் அந்த இரண்டு நோயையும் கொல்லிமழவன் மகளுக்கு வந்த முயலகன் என்னும் நோயையும் தீர்த்தருளிய வைத்திய சிகாமணியாகிய ஞானசம்பந்தர். சிவபெருமானை வழிபடும் அடியார்களுக்கு இரு நோயும் வாராதிருக்கும் பொருட்டு இவ்விரு திருப்பாசுரங்களையும் அருளியுள்ளார்.

ஆகவே, சிவனடியார்கள் மெய்யராகிப் பொய்யை நீக்கி, காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி, தினந்தோறும் தவறாது, இந்தஇரண்டு பாசுரங்களையும் ஓதிவந்தால், உயிர்நோய் உடல் நோய் இரண்டும் ஒழிந்துவிடும் என்பது உறுதி உறுதி உறுதி ஆதிசேடனைப் பாயலாகவுடைய திருமாலுக்கும் குளிர்ச்சியையுடைய தாமரையில் வசிக்கும் பிரமதேவனுக்கும், ஒருசமயம் அகந்தை நோய் வந்தது. திருமால், உலகத்தை காப்பதனால் நானே தலைவன் என்றார். பிரமன் உலகத்தை படைப்பதனால் நானே தலைவன் என்றார். அவர்கள் முன்னே நான்கு வேதங்களும் தோன்றி, முப்புரத்தை எரித்த போது, சிவபெருமான். மகா மேருவை வில்லாகவும், திருமாலாகிய உன்னை அம்பாகவும், அவரேறிய தேருக்கு, பிரமனே! நீர்பாகனாகவும் இருந்தீர்

உங்கள் துணையை அணுவளவுங் கொள்ளாமல் ஆயுதம் உப யோகிக்காமல் சிரித்தார். முப்புரமுஞ் சாம்பலாகி விட்டது. பிரமனே நீர், உலகத்தைப் படைக்கிறேன். நானே தலைவன் என்கிறாயே முன்னொருகால், சிவபெருமானைப் போல் நமக்கும் ஐந்துதலை இருக்கிறதென்று ஆணவங் கொண்டபோது, சிவபெருமான்தோன்றி உன்னுடையதலையில் ஒன்றைக்கிள்ளி விட்டாரே, இன்னும் நான்கு தலைகள் தானே இருக்கின்றன படைத்தலில் வல்லவனென்கிற, நீஉன் தலையைப் படைத்துக் கொள்ளவில்லையே. ஆதலால், நீ முதல்வனாகமாட்டாய் தெளிந்துகொள். திருமாலே, நீர் காத்தலில் வல்லவன்அதனால் நானே தலைவன் என்கிறாயே. உனது அருமை மகனாகிய மன்மதனை முன்பொருகால் சிவபெருமான், நுதற்கண்ணால் எரித்துச் சாம்பலாக்கினாரே. உன் மருமகள் இரதிதேவி அழுது புரண்டாளே அப்பொழுது காத்தல் தொழில் வல்லவனாகிய நீர். உன்மகனைக் காக்கவில்லையே, மேலும்திருப்பாற்கடலிலே ஆலகால விஷம் வந்தபோது, உன்னையும் உன்னோடிருந்த தேவர்களையும் காத்துக் கொள்ள முடியாமல், சிவபெருமான் திருவடியிலே நீங்களெல்லோரும் அடைக்கலம் புகுத. சிவபெருமான், உங்களெல்லோரையும் காக்க வேண்டி தான் விஷத்தையுண்டு, தனது கண்டத்திலே நிறுத்திக் கொண்டு உங்கள் கண்டத்தை நீக்கினாரே அப்பொழுது உனது தலைமையும் காத்தற்றொழிலும் எங்கே போயிற்று. பயன்படவில்லையே ஆதலால் நீர் தலைவனல்ல. நன்றாகத் தெளிந்துகொள்படைத்தல், காத்தல் தொழில்களும் அவனுடைய கருணையால் நடப்பனவே என்று இன்னோரன்ன பல உண்மைகளை, நான்கு வேதங்களும் எடுத்துக்கூறி அறிவுறுத்தியது. அப்பொழுதும் அவர்கள் தெளியவில்லை. சேதுபுராணத்திலே ஒரு பாட்டு,

(கவி)

கொள்ளை வல்விடமெழுந்த வன்றெதிர் குறித்துநின்று கணமாயுநின்
வெள்ளையான திருவுரு வெலாங்கருகி விட்டவாறினி விடுக்கொணு
துள்ளமேல துவுமுண்டயற் கிறைமையுற்ற தோடியு யிருப்தலாற்
பிள்ளைவாலமதி மௌலி கண்டமிருள் பெற்றதார்நிலை பெறக்கொலோ.

என்பதால் தெளியலாம். மாலும், பிரமனும் மயக்கம் நீங்காமலிருந்தார்கள். காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே.

என்று திருநாவுக்கரசு சுவாமிகளருளியதற்கிணங்க, சிவபெருமான் அவர்களைத் தெளிவிக்க, பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர். போதார் புனைமுடியும் எல்லாப் பொருண் முடிவே முடியாக ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாகத் தோன்றி, பிரம விஷ்ணுவே நமது சோதியுருவத்தின் அடிமுடிகளை யார் அறிகின்றீர்களோ அவர்களே தலைவர் என்று அருளினர். பிரமன் அன்னமாகவும், திருமால் பன்றியாகவும் உருக் கொண்டு பலகாலந் தேடியுங் காணமல், இளைத்து வந்து அஞ்செழுத்தோதி சிவபெருமானை வணங்கியருள் பெற்றனர்கள் இவ்வரலாற்றை=கோணு கணையானுங் குளிர் தாமரையானும் காணர் கழலேத்த கனலாயோங்கினன் என்று அருளுகின்றர். புகலிவித்தகர், இவ்வரலாற்றினுட் பொருளை விளக்குகிறர் சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்திலே.

திருச்சிற்றம்பலம்

''தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்தபடி விரித்தார்''

என்பதாகும் அப்பாடல் யாவராயினும் அன்பரன்றி அறியொணு மலர்ச் சோதியான், என்றபடியும் ஆரேனும் அன்பு செயின் அங்கே வெளிப்படுங்காண் ஆரேனுங் காணுவரன்= என்றபடியும்,

பிரமா முதல் எறும்பிறுக யாராயினும் திருவைந்தெழுத்தை, முறையாகப் பெற்று அன்போடுருகி அகங்குழைவார்க்கு மிகமிக, எளியவனுகியும் அப்படியல்லாமல் செருக்குடன் தொழாதிருப்பார்க்கு மிகமிக அரியவனுகியும் விளங்குபவன் சிவபெருமான் என்பதை, ஒன்பதாவது பாசுரத்தால் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாம்.

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந்தான்முடி நேடிய பண்பராய்
யாதுங்காண் பரிதாகி அலந்தவர்
ஓதுநாமம் நமச்சி வாயவே,

என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தாலும் தெளியலாம். சிவ பெருமானுடைய திருவருளைப் பெற விரும்புகின்ற அடியார் கள், யான் எனது என்னுஞ் செருக்கை அறுப்பவர்களாக இருக்க வேண்டும். அவர்கள்தான் உண்மையாகத் திருவருள் பெற முடியும். திருக்குறளிலே யான் எனது என்னும் செருக் கறுப்பான்வானோர்க்கு உயர்ந்த உலகம்புகும். என்றருளியுள் ளது. திருவிளையாடற்புராணத்தில் அருமையான திருப்பாடல்.

''பொருப்பகழ்ந் தெடுத்தோன் சென்னிபுயமிற மிதித்தாய் போற்றி
இருக்கிசைத் தவனேபாட விரங்கி வாள்கொடுத்தாய் போற்றி
தருக்கொடு மிருவர்தேடத் தழற்பிழம்பானுய் போற்றி
செருக்கு விட்டவரே பூசைசெய்ய நேர்நின்ருய் போற்றி''

என்னுந் திருப்பாடலை அன்பர்கள் மனதிலே தங்கம் போல தங்கவைத்து சிந்திக்கவும், செருக்குவிடாதார் பூசை செய்ய நேர்நில்லாய் போற்றி. யென்றும் அறிய வேண்டியது: கந்தர லங்காரத்திலே யான்ருன் எனுஞ் சொல் இரண்டுங் கெட்டா லன்றி யாவருக்கும் தோன்ருது சத்தியம், என்றருளியுள்ளார் அருணகிரிநாத சுவாமிகள், யான் எனது என்பது மனக் கோணல் சிந்தை. திருக்கு என்றும் சொல்லப்படும், யான் என்னும் செருக்கு உள்ளவர்க்கு இறைவன் ஒளிந்து கொள் வான், கோணல் இல்லாதார்க்கு இறைவன் முன்னின்றருள் செய்வான். எல்லாப் பெரியவர்களும் இக்கருத்தை வலியுறுத் திக் கூறுகிருர்கள். சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவா சாரிய சுவாமிகள் பத்தாஞ் சூத்திரத்தில்,

யான்செய்தேன் பிறர்செய்தார் என்னதியான் என்னும்
இக்கோணை ஞானவெரியால் வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிட அத்தத்துவன் தான்நேரே
தனையளித்து முன்னிற்கும் விணையொளித்திட் டோடும்
நான்செய்தேன் எனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம்
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பி னல்லால்
ஒருவருக்கும் யானென திங்கொழியா தன்றே.

என்று அருளியுள்ளார். செருக்கு கெட்டால்தான் சீவபோதம் நீங்கி,சிவபோதம் உண்டாகும். மனிதராகப் பிறந்த அனைவருக்

கும், அகந்தை எனப்படும் செருக்கு உண்டாவதியல்பே அவ்வகந்தை பூசை செய்வோருக்கு இருக்கக் கூடாது. ஆனால் உண்டாகும். கல்வி கேள்வி இயற்கை என்ற மூன்று வகையாலும் வரும் அறிவு என்கிற வாள் கொண்டு அறுத்துத் தள்ள வேண்டும். என்கிறார் அருணகிரிநாதசுவாமிகள் அநுபூதியிலே

கிரிவாய் விடுவிக் ரமவேள் இறையோன்
பரிவாரம் எனும் பதமேவ லையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவாய் அடியோடு மகந்தை யையே.

என்னும் பாடலால் தெளியலாம். திருவாசகத்திலே மாணிக்கவாசக சுவாமிகள், தமக்கு உடம்பு, உயிர், உணர்வு, உள்ளம், நான் என்ற ஐந்தும் கெட்டுவிட்டது என்கிறார். அத்திருப்பாடலைப் படியுங்கள்,

''வான்கெட்டு மாருதமாய்ந் தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட் டுயிர்கெட்டுணர்வு கெட்டென் னுள்ளமும் போய்
நான்கெட் டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ''

என்பதால் விளங்கும். செருக்கு அறுப்பதாவது, (1) எல்லாம் சிவபெருமானருளால் நடக்கிறது என்று உணர்வது, (2) தாய் தந்தை, குரு, சிவனடியார்களை அஷ்டாங்க நமஸ்காரம்புரிதல் (3) குருவையும், சிவனடியாரையும் சிவனெனப்பாவித்துவணங்கினோமானால்தான், சிவனருளைப் பெற முடியும் என்றுஉறுதியாக சந்தேகமில்லாமல் எண்ணுவது. (4) தன்னை உயர்த்திப் பேசாதிருத்தல் (5) தெரியாமலிருந்து கொண்டு தெரிந்தவர்களை போல நடந்து கொள்ளாமை. (6) தெரிந்த பெரியோர்களிடத்தே கேட்டுத் தெரிந்து கொள்வது (7) தம்மின்தீக்ஷை முதலியவற்றில் மூத்தவர் வந்தால் இருக்கை விட்டெழுந்து அவரை முகமும் அகமும் மலர வரவேற்று வணங்கி ஆதனந் தந்து அருச்சித்தல்அர்க்கியாதி புரிதல். (8)தெரிய வேண்டியது அதிகமுள்ளது என்று எண்ணுவது. (9) வணக்கமாக இனிமையாகப் பேசுதல். (10) தீயவைகளுக்கு அஞ்சுதல் ஆகிய இந்தப் பத்துக்குணங்கள் சிவனடியார்களுக்கு அவசியமானது இவைகள் செருக்கறுப்பதற்கு அடையாளமும் உபாயமுமாகும். இந்தப் பழக்கங்களில்லாமல் எத்தனை காலம் பூசை செய்

தாலும் சிவபெருமானுடைய அருளைப் பெற முடியாது. என்பது திண்ணம், திண்ணம், திண்ணம் சிவபெருமானுடைய திருவடியை அடைய வேண்டுமென்கிற உண்மையாகஎண்ணு பவர்கள். மேற் சொன்ன பழக்கங்கள் அவசியமாக கைக் கொள்ள வேண்டியது. திருவடியை அடையும் நோக்கமில்லை யானுல் மேற்குறித்த பண்புகள் வேண்டியதில்லை ஐந்தாந் திரு முறையில் அப்பர் பெருமான்.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பரவர் தம்மை நாணியே.

திருச்சிற்றம்பலம்

ஒன்பதாவது திருப்பாடலால் தெளிய வேண்டியது, சிவபெரு மானே முழுமுதற் கடவுள். செருக்கறுத்து அவன் திருவடி யைப் பணிந்தால் அவனருளைப் பெற முடியும். 8, 9 இந்த இருதிருப்பாசுரங்களையும் ஓதினுல் இருநோயுந் தீரும் என்று உணர்ந்து புகலிப் பிள்ளையார் பூங்கழல் போற்றி திகழும் பலவன் சேவடி சேர்வாம்.

(தொடரும்)

---

**மலர் 27. இதழ் 9. பக்கங்கள் 466-467-ல் உள்ள**
**ஆங்கிலக் கவியின் திருத்தம்**

This is my prayer to thee, my lord!
Strike strike at the root of penury in my heart

Give me the strength lightly to bear
the joys and sorows

Give me the strength to make my love
fruitful in service

Give me the strength never to disown
the poor and bend my knees before insolent might

Give me the strength to raise my mind
high above daily trifles

And give me the strength to surrender
my strength to thy will with love —R. Tagore.

சிவ சிவ]

569

# தருமம் வென்றது

திரு. K. M. ஜெயராமகிருஷ்ணன்,
ஆசிரியர், 18 கிழக்குத் தெரு, குமரலிங்கம்
உடுமலைத் தாலூகா, கோவை ஜில்லா.

இந்திய நாட்டின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் நிலைக்கலனாக இந்திய நாட்டின் இதிகாசங்களில் முதலிடம் பெறும் இந்த இராமாயண காவியத்தை வடமொழியில் இயற்றியவர் வான்மீகி முனிவர். அவர் இயற்றிய வடமொழி நூலை முதல் நூலாகக் கொண்டு தமிழ்மொழியில் கம்பர் இராமாயண காவியத்தை எழுதினார். இதனையே கம்பஇராமாயணம் என்கிறோம்.

இராமாயணத்திலே இராமனே கதாநாயகனாக, தெய்வீக புருஷனாக, அறத்தின் காவலனாக, தருமத்தின் திருவுருவாக, திருமாலின் அம்சமாக எழுந்தருளுகிறான். இத்தகைய வீர புருஷன் கானகம் ஏகி வாழ்கின்ற போது, இராவணனால் அனுப்பப்பட்ட மாரீசன் செய்த தந்திரத்தால் தன் துணையிழந்த நிலையில் தன் இளவல் இளைய பெருமானுடன் தென் திசை நோக்கிச் செல்கின்றான்.

துயரமே உருவெடுத்துச் செல்லும் அந்த உத்தமன் வழியில் சடாயு என்னும் கழுகு அரசனைக் கண்டு கலங்குகிறான். இராவணனுடன் போர் புரிந்து தன் சிறகு ஒடிந்து வீழ்ந்து கிடக்கும் அக்கிழ அரசன் கூறிய செய்தியால் தன் மனைவியை இராவணன் கவர்ந்து சென்றான் என்பதை அறிந்து வருந்துகிறான். தன் தந்தை தயரத மன்னன் இறந்த செய்தி கேட்டு அடைந்த துன்பத்திலும், தன் துணைவியை இழந்த நிலையில் பட்ட துன்பத்திலும் பல மடங்கு வேதனையை சடாயுவின் பிரிவால் இராமபிரான் எய்துகிறான். நீர்க்கடன் கழித்து

சடாயுவுக்கு மோட்சம் அருளிச் சீதையைத் தேடிச் செல்கிறான் இராமபிரான்.

வழியிலேகிட்கிந்தையிலே சுக்ரீவனுக்கு அபயம் அளித்து வாலியைக் கொன்று, வாயு மைந்தனால் சீதையின் இடம் அறிந்து, இந்துக் கடலிலே சேது அமைத்து தூய்மையின் காவலன் தன் துணைவனுடன் சுக்கிரீவன் படையுடன் இலங்கையை அடைகின்றான்.

வீரத்திலே சிறந்தவனும்,சிறந்த சிவபக்தனும் சாமகானத்திலே வல்லவனும், வீணைக் கொடியைக் கொண்டவனும் — அரக்கர் குலத் தலைவனும், மூவுலகையும் வெற்றி கொண்ட வேந்தனாகிய இராவணன்பால் தூது அனுப்புகிறான்.

எதற்காக?

பிறர்மனை கவர்வது குற்றம் என்பதையும் அது அறத்திற்குப் புறம்பானது என்பதையும் அறிவுறுத்தவே என்பதை நாம் அனைவரும் அறிய வேண்டுவது அவசியம்.

ஆயினும் என்ன? வீரம் இருந்தும் பக்தியிருந்தும் இசை வன்மை இருந்தும் - அறிவற்ற நிலையில் நின்ற இராவணன் அண்ணலின் அறவுரையை ஏற்கவில்லை. தான் பெற்ற வரத்தைப் பெரிதாக நினைக்கிறான். தான் செய்தது தவறு எனத் தெரிந்தும் – தவறை உணர்ந்து திருந்த மறுக்கிறான். அருமைத்தம்பி வீடணன் கூறிய நல்லுரையை வெறுக்கிறான், கும்பகர்ணன் கூறிய போதும் கடும் சினம் கொண்ட இராவணன் – தனியே சமர் செய்ய துணிந்து செல்கின்றான்.

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும் பொங்கி எழப் படை நடத்திச் செல்கின்றான். நாரத முனிவர்க்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவில் - அண்ணலின் திறம் அறியாமல் வீண்வார்த்தைகளை வஞ்சினமாக உதிர்த்துச் செல்கிறான். சங்கரன் கொடுத்த வாள் தனக்கு வெற்றி விளைக்கும் என்று திடமாக நம்புகிறான். இராமபிரானுடன் தான் செய்யும் போர் மறப்போர் என்பதையும் மறந்துவிடுகிறான்.

அண்ணலின் திருவுருவத்தைக் கண்டும் திருந்தாத நிலையில் அமர் புரிகிறான் என்னபயன்!

வாரணம் பொருத மார்பு எங்கே? வரையினை எடுத்த தோள் எங்கே? நாரத முனிவர்க்கு ஏற்ப நயம்பெற உரைத்த நாவு எங்கே? தார் அணிந்த மௌலி பத்தும் எங்கே? சங்கரன் கொடுத்த வாள் எங்கே?

எங்கே?எங்கே? என்று கேட்பதற்கு ஒருவரும் இல்லாத நிலையில் அனைத்தையும் இழந்து தனித்து நிற்கிறான் இலங்கை வேந்தன்.

இனிப்போரிடப் புதியபடைக்கலன் ஏதும் இல்லை. அதுவும் தனிமையிலே நிற்கின்ற. நிலை – இலங்கை வேந்தன் போரிலே தோல்வியைக் கண்டுவிட்டான். நிலம் பார்த்து நிற்கின்ற அந்த இலங்கை வேந்தனை அண்ணல் இன்சொலால் அழைத்து அருள் சுரக்கிறார். என்ன என்று?

"இன்று போய் நாளைவா" என்பதே அந்த இனிய சொல்லாகும் விரோதிக்கும் கருணை! போர்க்களத்திலே தனிமையில் நிற்கின்ற இராவணனை ஒரே அம்பால் கொன்றிருக்கலாம். சீதா பிராட்டியை இழந்து பல துயர்களையும் பட்டு, கடைசியில் சீதையைக் கவர்ந்து சென்ற அந்த இராவணனைக் கொல்லவும் வாய்ப்பு ஏற்பட்ட நிலையில் அண்ணல் கூறிய சொல்தான் எத்தனை பொருளுடையது!

தவறு செய்தவனையும் திருத்த திருந்த வாய்ப்பு அளித்து அவனையும் வாழச்செய்ய வாய்ப்பு அளிப்பதே உலகில் தோன்றிய அனைவரின் கருத்தாக அமையவேண்டும் என்பதை தன் ஒருசொல்லால் உலகிற்கு வழங்கினான் இராமபிரான்.

ஆயிரம்தான் பலம் இருந்தாலும், அறிவு இருந்தாலும், செல்வம் இருந்தாலும், அறவழியில் அமைந்தாலே வெற்றி கிடைக்கும் இல்லையெனில் வெற்றி கிடைக்காது என்பதனை இராம இராவண முதல்நாள் போர் நமக்கு நிதர்சனமாக்கி விட்டது மேலும் அதர்மம் தன்வீரம், அறிவு, செல்வம்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

12

# ஆனையும் அங்குசமும்

திரு. இர. புருடோத்தமன் M. A. அவர்கள்,
தமிழாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி
அவலூர்பேட்டை

பழங்காலத்தே தமிழ்நாட்டில்வாழ்ந்த மக்களில்பல்வேறு தொழில் செய்தவர்களும் தமிழை நன்கு கற்றுத் தேர்ந்திருந் தனர். அச்சுப் பொறி இல்லாத நாளில், புத்தகம் கிடைக்காத அக்காலத்தில், ஆசிரியரைத் தேடிச் சென்று கல்வி கற்று தமிழில் தேர்ந்தனர் எனில் அவர்களுடைய தாய் மொழிப் பற்றை என்னென்று கூறுவது?

இக்காலத்தே அச்சுப் பொறிகளால் பல்வேறு புத்தகங் களும் அச்சிடப் பெற்று மாணவர்களுக்குப் பயன்படுத்தப் பட்டு வந்தும், குறிப்புப் புத்தகங்கள் (Notes) வெளியிடப் பட்டும், ஆசிரியர்களால் நன்கு போதிக்கப்பட்டும், அரசியலா ரால் மாணவர்களுக்குப் பல்வேறு வேண்டிய நன்மைகள் செய்யப்பட்டும் மாணவர்கள் சிறந்தகல்வியறிவு பெறுகின்றார் களா எனில் ஐயமே!

ஒட்டக்கூத்தன் என்ற புலவன் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த காலத்தே அப்புலவன் தன்னைவிட வேறுயாரும் தமிழறி வில் சிறந்தவரில்லை என்று செருக்குக் கொண்டிருந்தான். ஒரு

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அனைத்தையும் இழந்து மண்மகள் நிலம் பார்க்க நாணிக் குறுகி அஞ்சி ஒடுங்கி யாவரும் அறியாமல் இருள் போர்த்து தனிமையில் சென்று அவிந்தது என்பதனை இராவணனது தோல்வி நமக்கு விளக்கியது.

எனவே, இராமாயண காவியத்தில் தருமம் இராமபிரான் உருவிலே தோன்றி மக்கள் மனதிலே தோன்றும் மாசுகளை அகற்றி தருமம் தழைக்கும்படி செய்து யாவரும் எம்பிரான் திருவருள் பெற்று உய்யும் வழிகாட்டும் என எண்ணி ஏன் இச்சிறிய கருத்தினை முற்றுப்புள்ளி இட்டு முடிக்கிறேன்,

சத்தியமே — ஜெயம்.

நாள் புலவன்தெருவழியே நடந்துசெல்ல எதிரே ஒருகுயவன் வந்து கொண்டிருந்தான் தனக்கு எதிரே சிறிதும் அச்சமின்றி வருகிறனே என்று சினங் கொண்டான் புலவன். பழங் காலத்தே சான்றோர்கள், மூத்தோர்கள் முதலானோர் தெரு வில் சென்றால் யாரும் அத்தெருவில் அவர்கள் முன் நடமாட மாட்டார்கள், அம்முறையில் மக்கள் சான்றோர்கள் முதலா னோர்க்கு மரியாதை காட்டினார்கள்.

தமிழிலே வல்ல தனக்கெதிரே நடந்துவரும் குயவனைக் கண்ட ஒட்டக் கூத்தன் ஆறாத சினங் கொண்டு,

''மோனை முத்தமிழ் மும்மதமும் பொழி
ஆனை முன்வந் தெதிர்த்தவன் ஆரடா?''

என்று வினவினான், ''மோனை எதுகை முதலான பாட்டுறுப் புக்கள் உடைய இயல், இசை, நாடகம் என்னும் முத்தமி ழுக்குமுரிய பாடல்களாகிய மூன்றுவகை மதங்களையும்பொழி கின்ற யானைபோன்ற என் முன்வந்து எதிர்த்தவன் யாரடா?'' என்று வினவினான் ஒட்டக்கூத்தன்.

எதிரே வந்த குயவன் உடனே,

''கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானை யும்வனை அங்குசப் பையல்யான்''

என்று விடையிறுத்தான். ''களிமண்ணால் வனைந்த பாண்ட மும், குடமும், குண்டு சட்டியும், பானையும் செய்யும் அழகிய குசப்பையல்யான்'' என்பதுவிடை. குயவன்என்பதேகுசவன் எனப்படுவது பேச்சுவழக்கு. இழிந்த குலத்தோன் என்பது பட 'குசப்பையல் யான்' என்றான் குயவன்.

அங்குசப் பையல் என்பதை அம்+குசப்பையல் என்று பிரித்து அழகிய குயவன் என்று பொருள் கொண்டோம். அங்குசப் பையல் என்று பொருள் கொண்டால் ஒட்டக் கூத்தன் தன்னை மும்மதம் பொழி யானை என்று சொல்லவே, யானையின் மதத்தை அடக்கும் அங்குசம் (தோட்டி) போன்ற பையல் யான் என்று பாடலில் விடைதொடுத்த ஒட்டக்கூத்த னுக்குப் பாடலிலேயே ஒட்டக்கூத்தனுடைய செருக்கு அடங்குமாறு விடையிறுத்த குயவன் தமிழறிவைக் கண்டு அசந்து போனான் ஒட்டக்கூத்தன்.

# ENGLISH TRANSLATION OF TAMIL LITERATURES

Prof: V. PERUMAL, M.A B.T. M.R.A S.
K. G. F. First Grade College,
Oorgaum, Kolar Gold Field
(Mysore State)

(Continued from Page 508 of vol 27)

Mr. M. L. Thangappa's translation of Sirupantrupadai (which appeared from May 1965 in series of issues of Thenmozhi, a Tamil monthly published from Cuddalore) though verse in form is easily intelligible

Following is a specimen of his translation.

"மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போலச்
செல்புனல் உழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடி" (Sirupanathrupadai: 1–5)

'Like a necklace dangling on the beauteous breasts.
Of dame Earth - the pretty hills her bamboo should-
The wild river flows; it comes from far (ers–
Enduring ceaseless water–flow.
On the fretted banks are fragrant groves
Where scattered lie the fading flowers
Which the pecking cuckoos caused to fall'.

(Thenmozhi: May 1965)

Thus every translation has its own merits and special features testifying the individual capacity of the translation.

## II. Some Problems

A translator of Tamil Literature into English has some difficult problems which cannot be solved

easily. There are certain practical difficulties and problems which cannot be solved by any translator whatever may be his intellectual versatility, and profundity For example the following quatrain cannot be rendered into English without losing the beauty of alliteration.

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறை தேர் வள்ளுவர் முப் பால்"

(Seethalal chathanar: Thirualluvamalai: 10)

It is difficult to maintain the rhyme and the rhythm of the following stanza if it is translated into English.

"சந்தப்பா விருத்தப்பா கலிப்பா வெண்பா
தாழிசைப்பா கொச்சகப்பா தனிப்பாவுக்கும்
விந்தைப்பா வாகியகி ரந்தப் பாவும்
எந்தப்பா உரைத்திடினும் ஒரு பேறில்லா
ஏதப்பா விக்கு நின திணைப்பா தத்தைக்
கந்தப்பா முருகப்பா போரி வாழ்வே
கையப்பா மெய்யப்பா காட்டப்பாவே"  (தனிச்செய்யுள்)

It is practically impossible to maintain the excellence of onomatopoeia and the euphonic beauty of the following stanza if it is rendered into English.

"பஞ்சு ஒளிர் விஞ்சு குளிர்ப் பல்லவம் அனுங்க
செஞ்சவிய கஞ்சநிமிர் சீறடியள் ஆகி
அஞ்சொல்இள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென் நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

(Kambaramayanam)

Every language has its own merits and defects. There are certain expressions in Tamil which cannot be translated into English. For instance it is impossible to translate the following Tamil sentence into English without losing its beauty.

அவன் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினான்.

Though the full meaning is crystal clear even to a lay man, it becomes an absolute difficulty even for the best translator of a high calibre to translate the above sentence into English.

There are certain Tamil proverbs which cannot be translated into English. Even if they are translated they will prove Greek and Latin to the readers Following are but a few proverbs of this category:

1. விடிய விடிய இராமாயணம் கேட்டு சீதைக்கு இராமன் சிற்றப்பன் என்கிறானாம்.

2. பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப் பாக்கு பத்துப் பணம் என்கிறாய்.

3. சும்மா ஆடுமா சோழியன் குடுமி.

4. நீறு இல்லா நெற்றி பாழ்.

There are certain customs and manners which are peculiar to Tamilnadu. There are many references to such customs in Tamil literature. It is really a Herculean task to translate such expression into English. The following are some such expressions:

(தொடரும்)

உ

சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

சிவமயம்

# குமரகுருபரன்

[மலர் 27] | கார்த்திகை 1-ம் (16-11-76) | [இதழ் 1]



தனிப் பிரதி 60 பைசா    வருடச் சந்தா ரூ. 7-00

## ஆசிரியர் குழு


1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,

சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்

காசிச் சர்வகலாசாலை, காசி

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L.

ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A..

ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4, திரு. டி. எச், விவேகானந்தம்பிள்ளை அவர்கள். [J. P.]

B. A. L. T. ஓய்வுபெற்ற அசிஸ்டண்டு கமிஷனர், சென்னை-86

5. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.

அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம். மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை,

கௌரவ நிர்வாக ஆசிரியர்.


## உள்ளுறை


பக்கம்

1. அருள் மொழி அமுது ... 529
2. சேக்கிழாரும் சேயிழையார்களும் ... 536
3. அலங்கார நாயகன் (25) ... 541
4. சைவ சமயத்தின் மாண்பு 5 ... 546
5. வாக்குறுதி ... 550
6. அமுது ... 556
7. ஞானசம்பந்தரும் நற்றமிழும் ... 562
8. தருமம் வென்றது ... 569
9. ஆனையும் அங்குசமும் ... 572
10 English Translation of Tamil Literatures ... 574